
கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(17.03.2019 - 17 பங்குனி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 204, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05



இயேசுவின் தோற்ற மாற்றம் 17. 02. 2019



பக்கம் 03 தவறுகளைத் திருத்தும் காலம் தவக்காலம்

பக்கம் 08 – 09 கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயரின் மேய்ப்புப்பணி மடல்



பக்கம் 13 உடலால் வேண்டுவோம்.

# போதைப்பொருள் ஓர் சமூக சீர்கேடு!




## போதைப்பொருளற்ற அழகிய உலகை எம் எதிர்கால சந்ததிக்கு அன்பளிப்போம்....

## இது எம் அனைவரினதும் பொறுப்பாகும்.



கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் 31.03.2019 அன்று ஞாயிற்றுக்கிழமை போதைப்பொருள் ஒழிப்பு அமைதிப் பேரணி கொழும்பில் நடாத்தப்படவுள்ளது. எமது நாடு இன்று போதைப்பொருள் பாவனையால் சீரழிந்து கொண்டிருக்கின்றது. இதிலிருந்து எமது வருங்கால சந்ததியினரை காப்பாற்றவும், போதைப்பொருள் விற்பனையாளர்களை ஒழிக்கவும் ஒன்றுகூடுவோம். எதிர்வாரும் 31ம் திகதி பி.ப 3.00 மணிக்கு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலயம், வத்தளை, நாயக்ககந்த பகுதிகளிலிருந்தும் மட்டக்குளி விஸ்ட்வைக் விளையாட்டு மைதானத்தில் ஒன்றுகூடி மாலை 5.00 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகும். இப்பேரணியில் பல மதத் தலைவர்களும் கலந்து கொள்கின்றனர். அன்றைய தினம் கொழும்பு உயர்மறைமாவட்ட பங்குகளில் காலை திருப்பலியில் போதைப் பொருள் ஒழிப்பு பற்றி மக்களுக்கு அறிவிக்கப்பட்டு திருப்பலியின் பின் இது சம்பந்தமான பதாதைகள் ஏந்தி சிறு பவனி ஒன்றை நடாத்துமாறு நமது பேராயர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சகல இன, மதங்களையும் இணைத்து நிறைவான புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவோம்



சீதுவை உதம்மிட்ட உத்தமராம விகாரை மண்டபத்தை திறந்து வைக்கும் வைபவத்தில் அதி. மேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை பிரதம அதிதியாக கலந்துக்கொண்ட போது இவ்வாறு உரைத்-தார். தொடர்ந்து தமது உரையில்,

எமது நாட்டில் அனைவரையும் சமமாக மதிக்கும் புதிய இலங்கையை கட்டியெழுப்புவதைப் பற்றி சிலர் கதைக்கின்றனர். எமது கலாச்சாரம், விழுமியங்களுக்கு விஷேசமாக மத கொள்கைகளுக்கு எதிரானவைகளைச் செய்து சமத்துவம் காணத்தேவையில்லை. நாட்டில் நிறைவான புதிய இலங்கையைக் கட்டியெழுப்ப; எமது நாட்டின் மத கொள்கைகளுக்கு முன்னுரிமைக்...

15

## பிலோமினா வயோதிபர் இல்ல திறப்பு விழா

கொழும்பு உயர்மறைமாவட்டத்திற்கு உட்பட்ட பிரதேசமான நாயக்ககந்த பங்கிற்குரிய அல்விஸ் வீதி இரண்டாம் ஒழுங்கையில் நல்லாயன் கன்னியர் மடத்திற்குப் பின்னால் வயோதிபப் பெண்களுக்கான பிலோமினா வயோதிபர் இல்லம் நிறுவப்பட்டுள்ளது.

அருட்பணி. பெசில் விக்கிரமசிங்க அடிகளார் இதன் பொறுப்பாளராக கடமையாற்றுகின்றார். இம்மாதம் 18ம் திகதி பி.ப 4.00 மணிக்கு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ஆண்டகை-யினால் திறந்துவைக்கப்படுகின்றது.

## மறையாசிரியர்களின் கவனத்திற்கு,

### ஆய்வுக் கட்டுரை 2019 (2018)

தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடந்-தோறும் நடாத்தப்படும் மறையாசிரியர் தேர்வுகளில், 2018ம் ஆண்டு மறையாசிரியர் இறுதித் தேர்வில் தோற்றி சித்தி பெற்றுள்ள பரீட்சார்த்திகள், அதன் அடுத்த கட்ட தேர்வான ஆய்வு கட்டுரையை எழுதி ஆனி மாதத்திற்குள் தத்தம் மறைமாவட்ட மறைக்-கல்வி நிலையத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். பின் அவை எமக்கு அனுப்பிவைக்கப்படும்.

ஆய்வு கட்டுரை எழுதுவதற்கான தலைப்பு-களும் விபரங்களும் ஏற்கனவே (சென்ற மாதம்) உங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அனுப்பியுள்ளோம். இதுவரை அதனைப் பெற்றிராவிடின் தயது செய்து எம்மோடு தொடர்பு கொள்ளவும். தொலைபேசி எண் 0112685459

**அருட்சகோ. ரஞ்சி போல்துரை,**
**தமிழ்ப்பிரிவு பொறுப்பாளர்,**
**தேசிய மறைக்கல்வி நடுநிலையம்**

## நாம் விசுவாசத்தின் பிள்ளைகளாவோம்

### 72வது சிறுவர் தினம் – 2019



படங்கள் திரு. கல்தேரா








15

அவரது வழிமரபு என்றென்றும் நிலைத்திருக்கும் (தி.பா 89)

## அன்பியம்
## “சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள்”
### கொழும்பு உயர்மறைமாவட்டம்
### 19.02.2019

பங்குகளுக்கு பயிற்சி பாசறை காலை 8.00 மணிக்கு ஆரம்ப செபத்துடன், அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் உரைகளோடு தொடங்கி வைக்கப்பட்டது. புனித சூசையப்பர் கல்லூரி விளையாட்டு அரங்கில் சிங்கள பிரிவினருக்கும், தமிழ் பிரிவினருக்கு புனித சூசையப்பர் கல்லூரியிலுள்ள 3ம் மாடியிலும் நடைபெற்றது.

தமிழ் பிரிவினருக்கு காலை பத்து மணிக்கு அருட்பணி. லூயிஸ் அடிகளாரினால் “இறைவார்த்தையை எடுத்து வாசித்து வாழ்ந்து காட்டுவோம் என்றும்” (யோவா 15:16) “நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்”. நீங்கள் கனிதரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன் என்றும் திருத்தூதர்பணி 2:42-47 வரையிலும் ஆதிக்-கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடிய நிகழ்வுகளை எடுத்து விளக்கப்படுதினார்கள். நான் நற்செய்தியில் வாழ்ந்து, போதித்து பிறருக்கு பிரகனடப்படுத்துவது இந்தியா நாக்பூரிலிருந்து வந்திருக்கும் அருட்பணி. எ.ப. தோமஸ் விஜே, இயக்குனர் அவரின் செய்திக்கும் தமிழில் மொழிபெயர்த்து வழங்கினார் அருட்பணி. லூயிஸ் அடிகளார். அதைத்தொடர்ந்து அருட்பணி. இக்னே-சியஸ் அடிகளார் முன்னேற்றம், வளர்ச்சியும் தேவை என்றும் குறைந்தது இந்த அன்பியமாவது 10 பேரோடு தொடங்கவேண்டுமென்றும் சிறிய தூரநோக்கு, சிறிய பங்குகளை உருவாக்குத்ல, மறைத்தூதுப் பணி இலக்கு வேண்டும். குறிக்கோள், செயற்பாடுகள், விசுவாச பகிர்வுகள், மதிப்பு, நற்செய்திப்பணி, திருவிவிலியத்தின் சாரத்தை உணரவேண்டும்.

1. தெருவில் எத்தனை குடும்பங்கள் என்று பார்க்க வேண்டும்.
2. இறையரசுப் பணியில் எதற்காக அழைக்கப்பட்டிரு-க்கிறோம் என்பதை உணரவேண்டும் என்றும், தலைவர் செயலாளர், பொருளாளர் வாரத்திற்கு ஒருமுறை ஒன்று கூடுதல்.

உணர்வு ரீதியான வளர்ச்சி தேவை என்றும் உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி. பிறரன்பு கட்டளைக்கு உயிருள்ள போதனையாக நாம் வாழ்ந்து காட்டுவது எப்படி என்றும் அருட்தந்தை-யால் முன் வைக்கப்பட்டது. பின் மதிய உணவு வேளைக்கு இடைவேளை கொடுத்து பி.ப 2.00 மணிக்கு அருட்பணி. கிளேரியன் அடிகளாரால் இலங்கையில் எப்போது அன்பியம் ஆரம்பிக்கப்பட்டது என்று கேள்வி வினவப்பட்டு புனித யோசேவ்வாஸ் காலத்தில் சிறு சிறு குழுக்களாக ஏற்படுத்தப்பட்டது. புனித யோசேவ்வாஸ் வந்த பின்னர்தான் விசுவாசம் பாதுகாக்கப்பட்டது என்றும், எப்படிப்பட்ட கூட்டுறவு மனப்பான்மை இருக்கவேண்டும் என்றும், திருப்பலியின் முக்கியத்துவத்தையும், திருத்தூதர் பணி 2:42-45 விளக்கம் கொடுக்கப்பட்டு திருப்பலிக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்றும் செபம், இறைவேண்டலில் உறுதியாக இருக்கவேண்டும் என்றும் (யோபு 21:14-18லிருந்தும்) ஆண்டவருடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் 1பேதுரு 5:8ன்படி வாழ்க்கையில் போராடுவதற்கு ஜெபிக்கவேண்டும். நட்புறவு அவசியம். பின் இப்பயிற்சி பாசறையை பங்கில் மீளாய்வு செய்யவேண்டும் என்றும், பங்கு குருவிற்கு அறிக்கவேண்டும் என்றும் பங்கு குருவின் ஆலோசனை பேரில் தொடங்கவேண்டும் என்றும் அறிவித்தல் கொடுக்கப்பட்டது.

**தகவல் : திருமதி. சுகிர்தா ரொபின்சன் பர்னாந்து.**

## புனித கல்கத்தா தெரைசா ஆலயம், தல்கஸ்வலை

தல்கஸ்வல புனித கல்கத்தா தெரெசா ஆலயம் பல்வேறு விதங்களில் இலங்கை கத்தோலிக்க மக்களுக்கு ஆன்மீக சேவையாற்றி வருகிறது. அதில் ஒரு பகுதியாக மறைக்கல்வி மாணவர்கள் - ஆசிரியர்கள், பல்வேறு பக்தி சபையினர், இளையோர் மற்றும் இறைமக்களுக்கான சிறப்பு ஒருநாள் தியானங்களை நடாத்த சிறந்த இடமாக இது அமைந்திருக்கிறது என அறியத்தருகிறோம். இந் 40 நாட்களில் பங்கு ரீதியாக, பாடசாலை ரீதியாக குழுக்களாக தவக்கால தியானங்களை நடாத்த விரும்புகிறவர்கள். எங்களுடன் தொடர்புக் கொள்ளவும். இதற்காக பின்வரும் விடயங்களை மேற்கொள்ளவும்.

சிலுவைப்பாதை மற்றும் திருப்பலியோடு தியானம் நிறைவுபெறும். குழுத் தலைவர்கள் தங்களுக்கு தேவையான தலைப்பைத் தேர்வு செய்து 10 நாட்களுக்குமுன் பதிவு செய்யவும். தியானக் கட்டணம் கிடையாது. அன்னை தெரெசாவின் முதல்தர புனிதப் பண்டம் (புனித இரத்தம்) எங்கள் ஆலயத்தில் இறைமக்களின் ஆராதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. புனித கல்கத்தா அன்னை தெரசாவிற்கு முதன் முதலாக அர்ப்பணிக்கப்பட்டுள்ள இவ்வாலயத்திற்கு வருகை தந்து இறை ஆசி பெற, மேற்கண்ட தியானங்களிலும் கலந்து கொண்டு தவக்காலத்தில் உங்கள் வாழ்வை புதுப்பித்து புதியவர்களாய் வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

**தொடர்புக்கு: அருட்பணி. அருண் றெக்ஸ்**
**0750473011, 0763138674**

ஆலயத்திற்கு வரும் வழி: குருந்துகா Express Way Exit லிருந்து இனிதும செல்லும் வழியில் 22கிமீ தொலைவில் உள்ளது.

## இரத்தினபுரி மறைமாவட்டம், தவக்கால வழிபாட்டு ஆராதனை செயலகம்

“தவக்கால திருப்பலியை அர்த்தமுள்ளதா-க்குவோம்” என்ற தலைப்பை மையமாகக் கொண்டு கடந்த 2019. 02. 22,23ம் திகதிகளில் மறைக்கல்வி நிலையத்தில் இரத்தினபுரி கரிட்டாஸ் - செத்மினி நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி. என்டன் சிறியான் அடிகளார் ஏற்பாடு செய்து சிங்கள மொழியில் நெறிப்படுத்தினார். தமிழ் மொழியில் முன்னாள் தேசிய வழிபாட்டு இயக்குனர் அருட்பணி. இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அடிகளார் நெறிப்படுத்தினார்.



15

## மனவளக் கலை பயிற்சி வழங்கல்

கொட்டாஞ்சேனை விவேகா ஸ்கை யோகா மன்றத்தலைவரும் மனவளக்கலை கொழும்பு பேராசிரிய-ருமான அருள்நிதி மறிஸ்ரெல்லா புனிதராஜா அவர்கள் மன்னாருக்கு வருகை தந்துபோது மன்னார் பட்டித் தோட்டத்தில் அமைந்துள்ள செபமாலைக் கன்னியர் துறவற ஆச்சிரமத்தில் வசிக்கும் துறவிகளுக்கு தத்துவ ஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிசியின் வேதாத்திய வகுப்புக்களை 21.02.2019 தொடக்கம் 23.02.2019 இரவு வரைக்கும் மூன்று நாட்கள் தொடர்ந்து நடாத்தப்பட்டபோது உயிர்வளத்திற்கான சித்தர்களின் கலையாக காயகல்ப பயிற்சியும், உடல் நலத்திற்கான எளியமுறை உடற்பயிற்சிகளும், சூரிய நமஸ்கார பயிற்சிகளும் வேதாத்திரிய உணவு முறைமைகளுக்கான அறிவுரைகளும் வழங்கப்பட்டன. மேலும் தென் இந்திய கல்வித்துறையில் மனவளக்கலையும் ஒரு கட்டாய பாடமாக பல்கலைக்கழகங்களில் இணைக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**தகவல் : அருள்நிதி. ய தேவதாஸ், மனவளக்கலை துணைப் பேராசிரியர், கோப்பாய்.**

## மரியாயின் சேனையாளரின் வெளிவிழா 2019

கொழும்பு உயர்மறைமாவட்ட சிறுவர், வளர்ந்தோர் மரியாயின் சேனையாளர்களின் வருடாந்த வெளிவிழா நிகழ்வு கடந்த பெப்ரவரி மாதம் 19ம் திகதி களுத்துறைமாவட்டம் ஹெரண, நிவ்செட்டில் தோட்டத்தில் அமைந்துள்ள திருக்குடும்ப ஆலயத்தில் காலை 9.00 மணியிலிருந்து மரியாயின் சேனை ஆரம்ப செபத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றது. சேனையாளர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களின் ஆளுமை, உளப்பாங்கு ஒற்றுமையுணர்வு, ஒழுங்கு மனப்பாங்கு, நடவடிக்கை திட்டமிடல் என்பன விளங்கும் வகையில் விளையாட்டுக்களும் ஏனைய நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இசை நடனம். சுவட்டு போட்டி நிகழ்வுகள் என்பவற்றில் கலந்து மகிழ்வடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சேனையாளர்கள் அனை-வரும் வேறுபாடுகளின்றி மகிழ்ச்சியுடன் பங்குபற்றினர். நிகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டு ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி ஒனாசியஸ் அடிகளாரால். மதியநேரத் திருப்பலி...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## மடு மண்ணில் திருப்பாலர் சபையின் இரண்டாம் பயிற்சிப்பாசறை



மன்னார் மறைமாவட்டத்தின் மடு தியான இல்லத்தில் திருப்பாலர் சபையின் ஊக்குவிப்பாளர்-களுக்கான 2ம் பயிற்சிப்பாசறையானது இம்மாதம் 2ம், 3ம், 4ம் திகதிகளில் மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை ஆகிய மறைமாவட்டங்களுக்கு இடம்பெற்றது...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## கொழும்பு யோசேவ்வாஸ் மன்றம் 23வது தடவையாக நடாத்திய பெரிய சிலுவைப் பாதை நிகழ்வுகள்



ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
17 பங்குனி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# “போதைப்பொருள் விழிப்புணர்வை கொணர்வோம்”

தவக்காலத்தின் மூன்றாம் வாரத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றோம். தவக்காலத்தின் சிறப்பே மனமாற்றமாகும். மனந்திரும்பாவிடில் அழிவீர்கள் என்று எச்சரிக்கும் இயேசு மனந்திரும்ப இறைவன் மீண்டுமாக தரும் சந்தர்ப்பமே தவக்காலம் ஆகும். இதை நாம் காய்க்காத அத்திமரம் கதையினூடாக பார்க்கின்றோம். இறைவன் மனிதனின் அழிவை விரும்பாதவர். அவன் வாழ்வு பெற வேண்டும் என்று எண்ணுபவர். ஆனாலும் மனிதன் தவறுகளும் பிழைகளும் புரிந்திடும்போதெல்லாம் உடனடியாக தண்டிக்க மாட்டார். காலந்தாழ்த்துபவர். பொறுமை காப்பவர். இதற்காக பல வழிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி தந்து நாம் மனமாறும்வரையில் ஆசையோடு காத்திருப்பவர். உள்ளார்ந்த நேர்மையான மனமாற்றம் கடவுளின் மனத்தையே மாற்றிச் செயற்பட வைக்கும் என்பதை திருவிவிலியத்தில் நினிவே நகர மனமாற்றம்இ இறைவாக்கினர் எரேமியாவிற்கு அளிக்கப்பட்ட இறைவாக்கு மற்றும் சிலை வழிபாட்டில் இன்பம் கண்ட இஸ்ரயேலருக்கு பரிந்துரை செய்த மோசேயின் வேண்டுதல் என பல நிகழ்வுகளைக் காண்கின்றோம். ஆக நல்ல மனிதர்களாக, மனிதத்துவம் நிறைந்தவர்களாக வாழ்வதற்கு இத்தவக்காலத்தைப் பயன்படுத்தி மனமாற்றம் பெறுவது அவசியமானதாகும்.

இம்மாதம் 19ம் திகதி விசேடமாக தூய யோசேப்பை திருச்சபையானது நினைவுகூர்கின்றது. இவர் மனித நேயம் கலந்த நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்ந்த நேர்மையாளர். இவரது நம்பிக்கையானது எல்லைக் கடந்த சோதனைக்கு ஆளானது. நம்பிக்கைக்கு எதிராக நம்பியவர். தூயவர்கள் என்போர் சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் அப்பாற்பட்டவர்கள் அல்லர். மாறாக அவர்களும் சிக்கல்களை, பிரச்சினைகளை, சோதனைகள் இவைகளுக்கு முகங்கொடுத்து வாழ்ந்தவர்கள். இவரது வாழ்க்கை என்றும் மலர்ப் படுக்கையாக இருந்ததில்லை. மரியா கருவுற்ற செய்தி கேட்டு எவ்வளவுப் பெரிய அதிர்ச்சிக்கும் மனக்குழப்பத்திற்கும் ஆளானவர். இறைத்திட்டத்தை நிறைவேற்றுவது அல்ல மாறாக இறை விருப்பத்தைவிட மேலானது இவ்வுலகில் வேறொன்றில்லை என உணர்ந்தவர்.

இன்று உலகெங்கும் பரவலாக வளர்ந்துகொண்டிருக்கும் ஒரு நிகழ்வு என்றால் போதைப்பொருள் பாவனையாகும். சிறுவர் முதல், பெரியோர் வரை முக்கியமாக இளம் வயதினரை இது பாதிக்கின்றது. எமது இலங்கை நாட்டிலும் இது விதிவிலக்கல்ல. மக்களிடையே போதைப்பொருள் பாவனைகள் அதிகரித்துக் கொண்டே போகிறது என்பதை நாம் பார்க்கமுடிகிறது. இதனால் ஏற்படும் விளைவுகளை யாரும் உணர்ந்தபாடில்லை. பெற்றோர்க்கும் சரி, ஆசிரியர்களுக்கும் சரி, தமது பிள்ளைகள், சகோதர சகோதரிகளில் கூடிய கவனம் செலுத்துவதில்லை. அவர்களின் நிலையை கண்டு கொள்வதில்லை. இன்று கூடுதலாக எமது சமுகத்தில் இளம் பிள்ளைகளே போதைப்பொருள்களை பாவிக்கின்றார்கள் எனலாம். இவர்களின் எதிர்காலம் முற்றிலும் அழிந்து விடுகிறது.

இவர்களின் நிலை மாறவேண்டும். இவர்கள் மாறவேண்டும் என்றால் இவர்களிலே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இப்போதைப்பொருள் விநியோகத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்ற தீர்மானத்தில் எமது கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை எதிர்வரும் 31ம் திகதி ஞாயிற்றுகிழமை போதைக் பொருள் ஒழிப்பு அமைதி பேரணி ஒன்றை நடாத்துமாறு அழைப்பு விடுத்துள்ளார். அதற்கிணங்க கொழும்பு மறைமாவட்ட பங்குகளும், பிற மதத் தலைவர்களும், பொதுமக்களும் சேர்ந்து போதைப்பொருள் ஒழிப்பு பேரணியில் கலந்து எமது பிள்ளைகளையும் சந்ததியையும் காப்பாற்றுவோம். ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவோம். அதற்காக ஒத்துழைப்போம்.

**இறையாசீருடன் ஆசிரியர்**



# தவக்காலம்

## தவறுகளைத் திருத்தும் காலம்

**எது நல்லது? எது கெட்டது? எனப் பிரித்துப் பார்க்க இயலாமல் மனிதர்கள் தடுமாறுவதும் கண்கூடு.**

விதைப்பதற்கு ஒரு காலம், அறுப்பதற்கு ஒரு காலம், சிரிப்புக்கு ஒரு காலம், அழுகைக்கு ஒரு காலம். ஆம் இதைபோன்று ஒவ்வொன்றிற்கும் ஏற்ற காலத்தை ஆண்டவர் படைத்திருக்கின்றார். அதைப்போல, மனிதர்களாகிய நாம் வாழ்வில் நாம் செய்த தவறுகள், தண்டனைகள், கோபம் (பாவம்) அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்கிற, அதற்காக மனஸ்தாபப்பட உரைகல்லாக இறைவார்த்தை ஒன்றிப்போடு ஒப்புரவு ஆகும் காலமே தவக்காலம்.

தவம், தர்மம், செபம் இம்மூன்றுமே அடித்தளமாக இக்காலத்தில் ஆணி வேராகிறது. மாற்றம் ஒன்றே மாறாதது என்ற எண்ணத்தில், மாறத் துடிக்கும் ஒருவர் மனமாற்றம் மனவருத்தம், பாவ அறிக்கை, பரிகாரம் போன்ற நிலைகளை உணர்ந்து கடவுளிடம் ஒப்புரவாக வேண்டும்.

### பாவம் என்பது என்ன?

“இறைவனின் கட்டளைகளை மீறுவதே பாவம்” என்று சின்னக் குறிப்பிடம் நமக்குக் கற்பித்தாலும், இன்னும் நமக்கு பாவத்தைப் பற்றிய தெளிவு ஏற்படவில்லை என்பது உண்மையே. எது நல்லது? எது கெட்டது? எனப் பிரித்துப் பார்க்க இயலாமல் மனிதர்கள் தடுமாறுவதும் கண்கூடு.

எனவே, அன்பு என்கிற மிகப்பெரிய கொடையை நாம் கண்டுணர்வோம். அன்புதான் உணர்வின் உச்சமும், வாழ்க்கையின் உற்சவமும். புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் அன்பின் அருள் அடையாளங்களை மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றார்.

இயேசுவே உண்மையான அன்பு. அன்பே இயேசு. இதைவிட தெளிவான உதாரணம் இல்லை. மத்தேயு 25:35இல் “நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன், தாகத்தைத் தணித்தீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன், ஆடை அணிவித்தீர்கள். சிறையில் இருந்தேன் என்னைத் தேடிவந்தீர்கள்” என்றார் ஆண்டவர் இயேசு.

உறவினர்களாலும், நண்பர்களாலும், தெரிந்தவர்களாலும் நமக்கு வரக்கூடிய வேதனை, அவமானம், மனத்துயரம், மனக் கஷ்டங்களை பொறுமையோடு ஏற்றுக்கொண்டு, அவற்றுக்குப் பரிகாரமாக நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, நற்கருணை பெறவேண்டும். “போசனப்பிரியம்” என்பது ஒரு பாவம் என்பதை உணர்ந்து, ஒரு சந்தி சுத்தபோசனத்தை கண்டிப்பாக நாம் கடைப்பிடிக்க வேண்டும். ஏழு வயதானவர்கள் சுத்தபோசனமும், 21 வயதானவர்கள் ஒரு சந்தியும் அனுசரிக்க வேண்டும்.


மனத்தாழ்மையோடு கடவுளின் வழியைப் பின்பற்றுவது மிகவும் அவசியம். கடவுள் தீமையை வெறுப்பவர். ஆனால் மக்கள் மனம் திரும்பும்போது தமது கடும் கோபத்தைச் சட்டென மாற்றி அகம் மகிழ்பவர். நாம் அவரை முழுமையாக விசுவசித்து, கீழ்ப்படிந்து, நேசித்து இத்தவக்காலத்தில் அனைத்துப் பக்தி முயற்சிகளிலும் பங்கெடுத்து இறைவனில் சங்கமிப்போம். எல்லாவற்றிலும் நம்பிக்கைதான்...

**இந்த உலகில் கடவுளின் பங்குதான் என்ன?**

**அந்த நம்பிக்கை தான் கடவுள்!**

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# மௌனத்தின் ஆழம்

## புனித சூசையப்பர்

திருநாள் பங்குனி - 19
சிந்தனை

***நன்று, நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே, சிறியவற்றில் நம்பிக்கைக் குரியவனாய் இருந்தாய், ஆதலால் உன்னைப் பெரியவற்றுக்கு அதிகாரியாக்குவேன். உன் தலைவனது மகிழ்ச்சியில் சேர்ந்து கொள்*** மத் 25:23

புனித சூசையப்பர் நல்மரணத்திற்கும் தொழிலாளர்களுக்கும் பாதுகாவலராக விளங்குகிறார்.

கலிலேயா நாட்டில் நாசரேத் நகரத்தில் தாவீது மரபில் யாக்கோபு, நீப்பி என்ற ஏழைப் பெற்றோருக்குப் பிறந்த மகன்தான் சூசை. **சூசை என்றால் வளம் உடையவர் என்று பொருள்.** இவர் 12 வயதில் தவநிலை நாடி காட்டுக்குச் சென்றார். வழியில் முதியவராக வந்த ஒரு வானதூதர் **மாசற்ற வாழ்வு** மனத்தால் ஆவதெயன்றி இடத்தால் ஆவதன்று. மக்களிடையே வாழ்ந்து தவம்புரிந்து இரண்டு அறத்தையும் (துறவறம்,இல்லறம்) நடத்தும் பேரறமே மாட்சிமையுடையது என்றார்.

காட்டிலிருந்து வீட்டுக்கு வந்த சூசை உலகோரின் தீமை நீங்கி நன்மை பெருகும்பொருட்டு கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டுமென்று எப்போதும் ஜெபித்து வந்தார்.

தாவீதின் மரபில் தோன்றிய மரியென்னும் மங்கைக்கு அம்மரபிலே தோன்றிய ஒருவரை திருமணம் செய்விப்பாயாக என்று சிமியோன் என்ற பெரிய குருவுக்கு இறைவன் காட்சியில் கட்டளை இட்டார். சிமியோன் தாவீது குல இளைஞர்களை திருக்கோவிலுக்கு வரவழைத்து ஒவ்வொருவர் கையிலும் ஒரு கோல் கொடுத்து ஆண்டவரை வேண்டினார். சூசையின் கையிலும் ஒரு கோல் கொடுத்து ஆண்டவரை வேண்டினார். சூசையின் கையிலிருந்த கோல் பூத்து மனம் கமழ்ந்தது. இறைவனின் வரம் புறாவடிவமாக சூசையின் தலையில் பொன்னொளி பரப்பியது. 33 வயது சூசைக்கும் 15 வயது மரியாளுக்கும் திருமணம் ஒப்பந்தம் செய்வித்து **ஆண்டவர் உங்கள் மரபில் அவதரிப்பாராக** என்று சிமியோன் ஆசீர்வதித்தார்.

இருவரும் நசரேத்தூரில் வாழ்ந்து வந்தபோது மரியாள் கருவுற்றிருப்பதை அறிந்த சூசை மரியாளை ஐயமுற்றுப் பெருந்துயர் அடைந்தார். இறைவனை வேண்டினார். மரியாளும் கணவர் துயர்கண்டு இறைவனை அழுது வேண்டினாள். இருவரின் வேண்டுதலுக்கும் இரங்கி சூசையின் கனவில் கபிரியேல் தூதரைத் தோன்றச்செய்தார் இறைவன். அவர் வாயிலாக **மரியாள் மாசற்றவள், அவள் கருத்தாங்கியிருப்பது பரிசுத்த ஆவியாலே** என்று சூசை அறிந்துகொண்டார். மரியாளை வாழ்த்தினார்; மனமகிழ்வெய்தினார்.

சில நாட்களுக்குப் பின் இருவரும் குடிக்கணக்கு பதிவுசெய்ய சொந்த ஊராகிய பெத்லகேமுக்குச் சென்றனர். கூட்ட நெரிசலில் தங்க இடமில்லாததால் பெத்லகேம் குகைக்குச் சென்றனர். அங்கே இயேசு பிறந்தார். சாமக்காவல் புரிந்த இடையர்களுக்கு இயேசு பிறப்பு இறைதூதர்களால் அறிவிக்கப்படவே அவர்களும் வந்து பாலனை ஆராதித்து வணங்கினர்.



பிறந்த 8 ஆம் நாள் யூத சட்டத்தின்படி விருத்தசேதனம் செய்து பிள்ளைக்கு **இயேசு** என்று பெயரிட்டனர்.

ஏரோது, இயேசு பாலனைக் கொல்ல தேடியபோது, **குழந்தையை பாதுகாத்துக் காப்பாற்ற எகிப்து நாட்டுக்கு ஓடிப்போம்** என்ற இறைவன் ஆணையை ஏற்ற சூசை பல இன்னல்களையும் பொருட்படுத்தாது உடனே, இரவில் மரியாளையும் பிள்ளையையும் கூட்டிக்கொண்டு ஓடினார்.

ஏரோது இறந்த பின் கனவில் இறைவினின் ஆணைபெற்று திருக்குடும்பமாக இஸ்ரயேல் நாட்டிற்கு வந்தனர்.

இயேசுவுக்கு 12 வயது, எருசலேம் கோவிலில் நடைபெற்ற விழாவுக்கு சட்டமுறைப்படி சென்றனர். மகனோ (இயேசு) அங்கே தங்கி ஞானிகளிடம் வேத சாஸ்திரங்களை தர்க்கித்துக்கொண்டிருந்ததைப் பார்த்து பூரிப்படைந்தனர்.

சூசை தன் தச்சுத் தொழிலைத் தொடர, மரியாள் தன் வீட்டுப் பணிகளில் ஈடுபட, இயேசு இருவருக்கும் பணிந்து இறைவன் முன்னும் மனிதர் முன்னும் ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்தார்.

அருள் வரங்கள் நிறைந்த அன்னை மரிக்கேற்ற அன்பராக திகழ்ந்தார் சூசையப்பர். தன் வாழ்வில் இறுதியில், இயேசு மரியின் கனிவான பராமரிப்பில் வாழ்ந்து சூசை கண் மூடினார். அவரை நோக்கி மன்றாடுவோருக்குப் பரிந்து பேசுவதற்காக விண்ணில் இடம் பெற்றிருக்கிறார். அவரை நாமும் அண்டுவோம். நலம் பெறுவோம்.

**இயேசுவை வளர்க்கப் பிறந்ததனால்**
**இன்னல்கள் அனைத்தும் ஏற்றவரே**
**கன்னி மரியின் காவலரே**
**கற்பினைக் காத்திட உதவிடுவீரே**
**பொறுமை என்னும் நும் புண்ணியம்**
**பூதலம் நாணச் செய்திடுமே**
**பாரில் நல்மரணம் அடைந்திடவே**
**பரமனை எமக்காய் வேண்டிடுமே**

**கிறிஸ்தவ புனிதர்களில், புனித கன்னி மரியாவுக்கு அடுத்ததாக புனித யோசேப்பு வணங்கப்படுகிறார்**

**கிறிஸ்தவ வரலாற்றின் தொடக்க காலம் முதலே இவர் புனிதராக போற்றப்படுகிறார். இவர் கிறிஸ்தவர்களால் சிறப்பாக கத்தோலிக்கர் மற்றும் கிழக்கு மரபுவழித் திருச்சபையினரால் மிகவும் மதிக்கப்படுகிறார்.**

**புனித யோசேப்பு அகில உலகத் திருச்சபை, கற்பு, கல்வி, திருமணம், குடும்பங்கள்,நல்ல மரணம்ஆகியவற்றுக்கும், தொழிலாளர்களுக்கும் பாதுகாவலராக விளங்குகிறார்.**

**விழாக்கள்:**
கத்தோலிக்கத் திருச்சபையில் இவருக்கு இரண்டு விழாக்கள் சிறப்பிக்கப்படுகின்றன. அவை,

1. புனித யோசேப்பு கன்னி மரியாவின் கணவர் (மார்ச் 19),

2. புனித யோசேப்பு தொழிலாளர்களின் பாதுகாவலர் (மே 1).

**உலகில் நிலையாய் இருந்திடவே நாம் பிறக்கவில்லை........**
**உலகில் வாழ்வு தொடர்வதை மறந்தால் நிறைவில்லை......**

**மரணத்தை நினைவு கூறும் திருநீற்றுப் புதன்**
**மண்ணிலே பிறந்த நீ திரும்பவும் மண்ணுக்கே போகக் கடவாய்**

**மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்**

**மேற்கூறிய கூற்றுகளில் ஒன்றைக் கூறி குருவானவர் விபூதி புதனன்று நமது நெற்றியிலே சாம்பலினால் சிலுவை அடையாளம் வரைந்து**



**மனமாற்றத்தையும்,**
**மரணத்தையும் நினைவுபடுத்துகின்றார்.**

**இது தவக் காலத்தை ஆரம்பிக்கும் விசேட அழைப்பாகும்.**

| | | | |
|---|---|---|---|
| தவக்காலம் | – | மனமாற்றத்தின் | காலம் |
| தவக்காலம் | – | மரணத்தை நினைவு கூறும் | காலம் |
| தவக்காலம் | – | அருளை வழங்கும் | காலம் |
| தவக்காலம் | – | அதிகமாக செபிக்க வேண்டிய | காலம் |
| தவக்காலம் | – | இரக்கத்தை அனுசரிக்கும் | காலம் |
| தவக்காலம் | – | இறைவனைச் சந்திக்கும் | காலம் |
| தவக்காலம் | – | நம்மைப் புதுப்பிக்கும் | காலம் |
| தவக்காலம் | – | வரப்பிரசாதத்தின் | காலம் |
| தவக்காலம் | – | சிலுவைப் பாதை தியானிக்கும் | காலம் |
| தவக்காலம் | – | ஆசீர்வாதத்தின் | காலம் |
| தவக்காலம் | – | மனமாற்றத்திற்கு இறையாசீரைபெறும் | காலம் |

**ஆன்மீக ரீதியாக இறைவனுடனும், சமூக ரீதியாக சமுகத்துடனும், மனித ரீதியக நமது கிறிஸ்தவர்களுடனும் சிறந்த கிறீஸ்தவர்களாய் உருமாற அழைக்கப்படுகின்ற அருமையான காலம் தவக்காலமாகும். சுத்த போசனமும், ஒரு சந்தியும் அனுசரிப்பது பற்றி தவக்காலத்தில் திருச்சபை கட்டாயப்படுத்துகிறது. இவற்றையெல்லாம் நாம் சரியாக அனுசரித்துக்கொண்டு, மனமாற்றமின்றி, நற்செய்தியை விசுவசிக்காமல் பாவ வாழ்க்கையையே வாழ்ந்துக்கொண்டிருந்தோமானால் கிடைக்கும் பயன் என்ன?**

**மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய் மண்ணுக்கே திரும்புவாய்! மண்ணுக்குத் திரும்பும் முன் மனமாற்றம் அடைந்து, மன்னிப்புப் பெற்று இறையாசீரைப் பகிர்ந்துக்கொள்வோம்.**

**மேரி இருதயநாதன்**
**மறையாசிரியர், பேராலயம் இரத்தினபுரி**



# கடவுள் என்மீது அன்பு கூர்கிறாரா? நான் அவர்மீது அன்பு கூர வேண்டுமா?

### நம்மீது இயேசுவின் அன்பு

உங்களை நான் நண்பர்கள் என்றேன். நீங்கள் என் நண்பர்கள். நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்.

தம் மக்கள் மீது கடவுள் கொண்டுள்ள அன்பை தாய் தன் பிள்ளை மீது வைக்கும் அன்புக்கும், இடையன் தன் ஆடுகளின் மீது வைக்கும் அன்புக்கும் பெரும்பாலும் கடவுள் ஒப்பிடுவதைத் திருவிவிலியத்தில் பழைய ஏற்பாடு முழுவதும் நாம் காணலாம். எசாயா நூலில் கடவுள் கூறுகிறார். "பால் குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கியவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும், நான் உன்னை மறக்கவே மாட்டேன் (49:15). கடவுள் தம் அன்பினாலும் இரக்கத்தினாலும் தம் பாவங்களை மன்னிக்கிறார் என்பது அனைத்துப் பெரிய சமயங்களின் நம்பிக்கை ஆகும். இதுவே, தூய உள்ளத்தோடு கடவுளைத் தேடும் அனைவரையும் இணைக்கும் கண்ணுக்குத் தெரியாத பொன்னிலையாகும்.

நம் ஒவ்வொருவர் மீதும் தனித்தனியாக இயேசு அன்பு கூறுகிறார் என்பதையும் அதற்குப் பதிலாக நம்முடைய முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு இருதயத்தோடும், முழு வலிமையோடும் அவர்மீது நாமும் அன்பு கூரவேண்டும் என்பதையும் உணர வேண்டும்.

இயேசு கடவுள், இரண்டாம் ஆளாகிய கடவுளின் வார்த்தை மனிதராகத் தோன்றியவர். தந்தையைப்போலவும் தூய ஆவியைப் போலவும், அவரும் கடவுளே, இதுவே மூவொரு இறைவனின் மறைபொருள். மூன்று ஆட்கள் ஆனால் ஒரே கடவுள். நம்முடைய அன்பில் அவர்களைப் பிரிக்க முடியாது ஒருவரை நோக்கிச் செபிக்கும்போது இறையாட்கள் மூவரையும் நோக்கியே செபிக்கின்றோம்.

### இயேசு என்மீது அன்பு கூறுகிறாரா?

தனிப்பட்ட உன்மீது இயேசு அன்பு கூர்கிறார் என்பதை உண்மையிலேயே நீ புரிந்து கொள்கிறாயா? இயேசு உன் மீது அன்பு கொள்கிறார் என்பதில் எப்போதாவது உனக்கு சந்தேகம் ஏற்பட்டதுண்டா? குறிப்பாக, வருத்தமும், வறுமையும் உன்னை அழுத்தும்போது? நம் ஒவ்வொருவர்மீதும் தனித்தனியாக இயேசு அன்பு கூர்கிறார் என்பதில் ஏற்படும் அசையாத, வலிமையான நம்பிக்கையே நமது ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்கு அடிப்படையும் மூலைக் கல்லும் ஆகும். சமயம் என்பது அன்பு மயமானது என நாம் அறிவோம். அந்த அன்பு தருவதும் பெறுவதுமாக இருக்கவேண்டும். அது இருவழிப் பாதையாகும். இயேசு உண்மையிலேயே உன்மீது அக்கறை கொள்கிறார் என்பதை நீ எவ்வளவு ஆழமாக புரிந்துக் கொள்கிறாய்?

இயற்கை விதிகளின் படி சந்தர்ப்ப வசத்தால் பிறந்து உலகில் வாழும் கோடிக்கணக்கான நபர்களில் நீ ஒருவன் அல்ல என்று உணர்கிறாயா? அல்லது கடவுளால் மன்னிக்க முடியாத அளவுக்கு எண்ணிலடங்காதவையும் இழிவானவையுமான பாவங்களைச் செய்திருப்பதாக நீ எண்ணுகிறாயா? நான் செய்திருக்கும் பாவங்களையும் தவறுகளையும் மன்னிக்க இயேசுவால் எப்படி முடியும் எனத் திகைப்பவர்களில் நீ ஒரு நபரா? நான் அவர்மீது பெரிதாக அன்பு காட்டவில்லையே, அப்படியிருக்க நான் செய்த பாவங்களை மன்னித்து என்மீது அன்பு கூர அவரால் எப்படி முடியும் என நினைகிறாயா?

கடந்த காலத்தில் நீ அவரைப் பற்றிக் கவலைப்படாவிட்டாலும், அவர் உன்மீது அன்பு கூர்கிறார் என்பதுடன், பதிலுக்கு நீ அவர் மீது அன்பு கூறவும் விரும்புகிறாய் என்பது உறுதி. அவருடைய அன்பு எப்போதும் உள்ளது என நினைத்துப்பார். நீ பாவங்கள் பல செய்திருந்தாலும், அவர் மீது அன்பு செலுத்த தவறியிருந்தாலும், அவர் தம் கொடைகளை உன் மீது தொடர்ந்து பொழிந்து வாழ்வும் வளமும் தரவில்லையா? அவர் உனக்கு இன்னும் ஒரு வாய்ப்பு வழங்க விரும்புகிறார். அவரை நீ புறக்கணிப்பதால் நீ எதை இழக்கிறாய் என்பதை நீ உணரவேண்டும் என்று விரும்புகிறார். நீ இன்னும் மேம்பட அர்த்தமுள்ள வாழ்க்கை நடத்த தமது உதவியை உனக்கு அளிக்கின்றார். கடவுள் நம்மீது காட்டும் அன்புக்கு பதிலாக, கடவுள் மீது நாம் எவ்வளவு அன்பு கொள்கிறோம்? கடவுள் மீது அன்பு வைக்காமல் மற்றவர் மீது அன்பு செலுத்துதல், நிலைவாழ்வு பெறுவதற்கு ஏற்புடையதல்ல திருவிவிலியத்தில் எல்லாவற்றையும் விட மேலோங்கி நிற்கும் கருத்து இதுதான். கடவுள் தம் மக்கள் மீது அன்பு கூர்கிறார். மக்களும் தம்மீது அன்று கூறவேண்டும் என விரும்புகிறார். கடவுள் பொருட்டு ஒருவர் மற்றவர் மீது அன்பு கூறவேண்டும். ஒருவரை ஒருவர் மன்னித்து கொள்ள வேண்டும். மற்றவர்கள் மீது அன்பு கூறாமல் இருப்பது தவறு என நினைக்கின்றோம். ஆனால் கடவுளை புறக்கணிக்கின்றோமே என்ற எண்ணம் நம்மிடையே இல்லை. தற்காலத்தில் பலர் இயேசுவின் இரண்டாம் கட்டளையை பின்பற்றுகிறார்கள். ஆனால் முதல் கட்டளையை நினைப்பதில்லை. உண்மையை தேடுவதற்கும் கடவுளோடு தனிப்பட்ட உறவுகொள்வதற்கும் ஒரு பெரும் வேறுபாடு உள்ளது. கடவுள் மீது அன்பு கூர்பவர்கள் வேறு விதமாக வாழ்கிறார்கள். சுருக்கமாக சொல்லப்போனால், நம்முடைய சகமனிதர்கள் மீது அன்பு கூர்வது மட்டும் போதாது. உண்மையான மனசாட்சியும், பண்பட்ட மனநிலையும் போதாது. நம்முடைய ஒழுக்கமான வாழ்வும், படைப்புகளின் மீது அன்பு செலுத்துவதும் அக்கறை கொள்வதும் கடவுள் மீது அன்பு கொள்வதில் ஒருவகையாகும். ஆனால் அதுமட்டும் போதாது. நாம் கடவுள் மீது நேரடியாக முழுமையாக அன்பு செலுத்த வேண்டும். இது இன்றியமையாதது.

## ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் – 04

# உண்மையைக் கற்றறிதல்

- ஆழ்ந்த அறிவியல் ஆராய்ச்சியைவிட, தன்னைப்பற்றிய பணிவான அறிவு உன்னை இறைவனிடம் இட்டுச் செல்லும் உறுதியான வழியாகும்.
- கல்வியும், எந்தப் பொருளின் பொது அறிவும் பழிக்குரியவை அல்ல, தம்மிலே நல்லவை, இறைவனால் தரப்பட்டவை. அவற்றைப் பழித்தல் கூடாது. ஆனால், நன் மனச்சான்றும் பண்பான வாழ்வும் அவற்றைவிட என்றும் போற்றத்தக்கவை.
- பலர் நல்ல வாழ்வில் ஆர்வம் காட்டுவதைவிடக் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவதால் அடிக்கடி தவறுகிறார்கள். இழிந்த அல்லது குறைந்த பயனைப் பெறுகிறார்கள்.
- உண்மையைத் தெளிவாக்க நடத்தும் சொற்போரில் மனிதர் காட்டும் அத்துணை கவனத்தை, தீமையை வேரறுப்பதிலும், நற்பண்புகளை வாழ்வில் புகுத்துவதிலும் காட்டினால், மக்களிடையே இத்தனை தீமையும், தீய மாதிரியும் தோன்றியிரா, துறவிகள் இல்லத்தில் இத்தனை நெறிதளர்வும் ஏற்பட்டிராது.
- எதைக் கற்றோம், எதைச் செய்தோம், எவ்வளவு சிறப்பாக உரைகள் நிகழ்த்தினோம் என்பன நீதி நாளில் நம்மிடம் கேட்கப்படமாட்டா. எந்த அளவு பக்தியோடு வாழ்ந்தோம் என்றுதான் கேட்கப்படும்.
- வாழ்நாட்களில் உன்னோடு நெருங்கிப் பழகிய, அறிவிற்செறிந்த ஆசிரியர்களும் தலைவர்களும் இப்போது எங்கே? சொல்வாய்
- அவர்களுடைய சிறப்பிடங்களை இப்போது ஏனையோர் பெற்றிருக்கின்றனர். இவைப்பற்றி அவர்கள் சிந்தனை செய்ததுண்டா என்பதை நான் அறியேன்.
- தங்கள் வாழ்நாளில் அவர்கள் மதிப்புப் பெற்றிருந்தனர். இன்று அவர்களைப் பற்றி எவரும் பேசுவதில்லை.
- ஓ! உலக மகிமை எவ்வளவு விரைவில் மறைந்து விடுகிறது.
- அவர்களது வாழ்க்கை அவர்களின் அறிவை ஒத்திருந்தால் நற்பயனை எண்ணிக் கற்றிருப்பார்கள். வாசித்திருப்பார்கள்.
- இறைவனின் பணியில் குறைந்த கவனம் செலுத்தி, இவ்வுலகின் பயனற்ற கல்வியினால் எத்தனைபேர் பாழ்படுகின்றனர்.
- அவர்கள் தாழ்ச்சியைவிட மாட்சியையே நாடி நின்றதால் தங்கள் சிந்தனைகளாலே அழிவுற்றனர்.
- மிகுந்த அன்பு உடையவனே உண்மையில் பெரியவன்.
- தன்னைச் சிறியவனாகவும், பெருமையின் சிகரத்தைக் கூடத் துச்சமாகவும் மதிக்கிறவன் உண்மையில் பெரியவன்.
- கிறிஸ்துவை அடைவதற்காக உலகப் பொருட்கள் எல்லாவற்றையும் குப்பையெனக் கருதுபவன் (பிலிப் 3:8) உண்மையில் மதி படைத்தவன்.
- தனது சொந்த விருப்பத்தைத் துறந்துவிட்டு இறைவனின் விருப்பத்தைக் கடைப்பிடிப்பவனே உண்மையான நல்ல அறிஞன்.

தொடரும்

# ஆ ளு மை






இளையோர் புத்துலகம் படைக்க வேண்டுமென விரும்பும் இறைவன் அதற்கான ஆற்றலையும் அவர்களுக்கு அளிக்கின்றார். அந்த ஆற்றலைக் கொண்டு அவர்கள் முதலில் தங்களையும் தொடர்ந்து மற்றவர்களையும் மாற்றவேண்டும். அப்போதுதான் சமுதாயம் மாறி புத்துலகைத் தோற்றுவிக்கும். எனவே இளையோர் தங்களை மாற்றிக் கொள்வதற்கான திறனை இயேசு புதிய ஆளுமை வழியாக அருளுகிறார். இந்த ஆளுமை திருமுழுக்கில் கொடையாகக் கொடுக்கப்படுகிறது.

திருமுழுக்குப் பெறுகிறவர்களுக்குப் புதிய பெயர் கொடுக்கப்படுகிறது. பெயர் ஒருவரின் உள்ளியல்பை வெளியிடுகிறது. ஆதாம் தொடக்கநூலில் பெயரிடும்போது படைப்பின் நோக்கத்தையும் அதனதன் தனித் தன்மையையும் மனதில் கொண்டு சரியாகப் பெயரிட்டார். ஒருவரின் பெயர் மாற்றப்படும்போது அவரது ஆளுமையும், அத்துடன் மாறுகிறது. இவ்வாறே அபிராகாம் ஆபிரகாம், யாக்கோபு இஸ்ரயேல், சீமோன் பேதுரு, சவுல் பவுல் எனப் பெயர் பெற்றனர். இந்தப் பின்னணியில் தான் கர்தினால் ராத்சிங்கர் பாப்பரசர் பெனடிக்ட் எனப் பெயர் பெறுகிறார். அப்படியானால் திருமுழுக்கில் பெறுவது என்ன?

கிறிஸ்து திருநீராடியபோது செபித்தார் (லூக் 3:21) தூய ஆவி புறா வடிவில் அவர் மேல் இறங்கி வரலானார். திருத்தூதர்கள் மாடி அறையில் கூடிச் செபிக்கையில் தூய ஆவி அவர்கள் மீது நெருப்பு வடிவில் இறங்கி வந்தார். அதுபோல் இன்றும் திருமுழுக்குப் பெறுவோரை அதே நெருப்புப் புலன்களுக்குப் புலப்படாமல் ஆட்கொள்கிறது. நெருப்பில் போடப்பட்ட பொன் தூயதாகி அழகிய அணிகலனாகிறது. அதேபோல் நெருப்பு வடிவிலான ஆவி திருமுழுக்குப் பெறுவோரின் உள்ளத்தில் இறங்கி அவர்களது உள்ளுயிராய் இருக்கிறார். இதனாலே அவர்கள் கிறிஸ்தவர் எனப் பெயர் பெறுகின்றனர். (உரோ 8:10-11)

கிறிஸ்தவர்களில் இறங்கிய தூய ஆவி அவர்களின் பாவங்களைச் சுட்டெரித்து கறைகளை அகற்றி உள்ளத்தின் ஆழத்தில் அவர்களைப் புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளச் செய்கிறது. (எபே 4:23-24) ஆவியின் கனிகளாகிய அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு தன்னடக்கம் (கலா 5:23-24) ஆகிய பண்புகளை ஆழ்மனத்திற்குக் கொண்டு செல்கிறது. அங்கே கருவாக உருவாகி வளர்ச்சியடைந்து கிறிஸ்துவினுடைய முழுபருவத்தின் அளவை அடைந்து மகிழ்ச்சி நிறைந்த மனிதராக்குகிறது. அதன் பயனாக வாழ்பவன் நானல்ல என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே (கலா 2:20) என அறிக்கையிடும் அளவுக்கு கிறிஸ்துவின் ஆளுமையைப் பெற்றுவிடுகின்றார்கள்.

இவ்வாறு மனித - ஆளுமையை ஆட்கொண்ட கிறிஸ்துவே வாக்கு மனிதரான மறைபொருள். இவ்வார்த்தையை ஏற்றவர்கள் அதைத் தம் தம் இயல்புக்கு ஏற்ற ஆளுமையாக ஆக்கியுள்ளனர். முதுபெரும் தந்தையர்கள் : ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தையானார். யாக்கோபு நம்பிக்கையின் நட்சத்திரமானார். மோசே விடுதலை நாயகனானார். எசாயா புனிதத்தின் போதகரானார். சாலமோன் ஞானத்தின் மறு பெயரானார். ஆமோஸ் நீதியின் எதிரொலியானார். ஒசேயா அன்பின் அடையாளமானார். இவ்வாறு வெவ்வேறு மனிதருக்கு வெவ்வேறு ஆளுமையை அருளினாலும் அனைவருடைய ஆளுமையின் ஆழ்மனதில் நிலைத்திருப்பது மனித உருவான வார்த்தையே.

மானிடரான வார்த்தையின் ஆளுமையை அறிய பாவத்தில் பிடிபட்ட பெண்ணின் நிகழ்வைப் பகுத்து ஆய்வோம். இயேசு மிக மிக ஆழமான ஆள். ஆழியின் மேலே அலைகள் மலையென மோதுகின்றன. ஆனால் அதன் உள்ளாழத்தில் சலனமற்ற அமைதி. இயேசு போல் பரிசேயர்கள் ஓங்கிய குரலில் ஓலமிடுகின்றனர். நெருப்பின் பொல்லா நெருக்கடி கொடுக்கின்றனர். எனினும் இயேசு ஆழ்கடலிலும் மேலான அமைதியைக் கொண்டிருக்கிறார். எத்தனை ஆயிரம் மைல் வேகத்தில் புயல் வீசினாலும் அசைக்க முடியாத நங்கூரத்தை நாட்டி உறுதியாக ஊன்றியது போன்றது அவரது ஆளுமை. அள்ள அள்ளக் குறையாது ஊற்றெடுக்கும் ஆளுமையை உடையவர் இயேசு.

இத்தகைய இயேசுவின் ஆளுமையில் வேரூன்றி இருந்தவர் தான் பேதுரு. இயேசுவின் போதனையைச் செவி வழியாக நெஞ்சக் கலனில் சேகரித்தவர். பசுவைப் போல் அசைபோட்டு அதைத் தன்மயமாக்கியவர் யார்? என்ற போது, நீர் மெசியா (மத் 16:16) என்றார். நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா? என்றதும், நாங்கள் யாரிடம் போவோம் என இயேசுவைப் பற்றிக் கொண்டவர் (யோவா 6:68). கட்டளையிட்டதும் கடலில் குதித்தவர் (மத் 14:29) இவை யாவும் பேதுரு தம் ஆழ் மனத்தில் (லூக் 5:4) உருவாக்கிய இயேசுவினுடைய ஆளுமையின் சிதறல்கள்.

பேதுருவையும், விஞ்சும் அளவுக்கு இயேசுவின் ஆளுமையை பகிர்ந்து கொண்டவர் பவுலடியார் எனலாம். என்னால் எதையும் சாதிக்க முடியும் (பிலி 4:13) என்கிறவர், அகிலத்தையும் ஆட்கொண்டு ஆண்டவரின் பாதத்தில் அடி பணிய வைத்தவர். ஊடகங்களும் வான் ஊர்திகளும் இல்லாத அக்காலத்தில் உள்ளத்தை இறைவன்பால்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

166

கணவனும் மனைவியும் சேர்ந்து தமது நன்மைக்காகவும், குழந்தைச் செல்வத்தைப் பெற்று; அவர்களுக்குச் சரியான கல்வியறிவைக் கொடுக்க நிரந்தரமாகப் பங்களிப்புச் செய்பவர்களாகவும் இருவரும் கிறிஸ்தவர்களானால் கிறிஸ்துநாதர் மூலம் திருவருட்சாதன நிலைக்கு உயர்த்தப்பட்டவர்களாகவும் இருக்க ஏற்படுத்தப்பட்ட முழுவாழ்வுக்குமான உடன்படிக்கையாகும். [திருச்சபைச் சட்டம் 1055]

கத்தோலிக்கர் இருவருக்கிடையில் நடக்கும் திருமணம் சாதாரணமாகத் திருப்பலியில் நடைபெறும். கிறிஸ்துநாதர் தமது மணப்பெண்ணான திருச்சபைக்குக் கொடுத்த புதிய உடன்படிக்கையின் கொடை நற்கருணையாகும். ஆகவே ஒருவர் மற்றவருக்குக் காட்டும் அன்பின் மூலம் ஒற்றுமையாகும் தம்பதிகள் தமது திருமண உடன்படிக்கையை திவ்விய பூசைப்பலி நடக்கும் வேளையில் செய்து கொண்டு, கிறிஸ்தவ சங்கத்துடன் சேர்ந்து ஆண்டவரின் திரு உடலிலும், இரத்தத்திலும் பங்கு கொள்வது பெறுமதி வாய்ந்ததாகும். திருமணம் முடிக்கும் இருவரும் திருவருட்சாதனத்தை ஒருவர் மற்றவருக்கு வழங்குகிறார். கிறிஸ்தவ சங்கத்தின் முன்னிலையில் ஒருவர் மற்றவருக்குத் தமது விருப்பத்தைத் தெரிவிப்பதன் மூலம் திருவருட்சாதனத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். [திருச்சபைச்சட்டம் 1055.]

இனி இருவர் அல்லர், ஒரே உடல் (மத் 19:6). இருவரும் நெருங்கி இணைந்து செயல்களிலும் ஒன்றிப்பதால் ஒருவருக்கொருவர் உதவியும் ஊழியமும் செய்கின்றனர். தங்கள் ஒன்றிப்பை உணர்கின்றனர். நாளுக்கு நாள் அவ்வுணர்வில் வளர்கின்றனர். ஒருவருக்கொருவர் தங்களையே கொடையாக அளித்தலே இந்த நெருங்கிய ஒன்றிப்பு. எனவே இவ்வொன்றிப்பும் குழந்தைகளின் நலனுமே முழுப் பிரமாணிக்கத்துக்கும் பிரிக்க முடியாத ஒன்றிப்புக்கும் காரணமாய் உள்ளன. [இரண்டாம் வத்திக்கான். இ.தி. 48]

திருமணத்துக்காக ஆயத்தமாகுவது மிகவும் முக்கியமானதாகும். ஒருவர் மற்றவருக்குத் தெரிவிக்கும் விருப்பம் உண்மையானதாகவும், பொறுப்பானதாகவும் இருப்பது, அதைப்பற்றிய நல்லறிவைப் பெறுவதன் மூலமேயாகும். திருமணத்திற்காக ஆயத்தப்படுவோருக்கு அதைப்பற்றிய அறிவை ஊட்டுவதற்கு மிகவும் பொருத்தமானவர்கள் திருமணமானவர்களே. காரணம் திருமண வாழ்வில் ஏற்படும் துன்பம், மகிழ்ச்சி, பிரச்சினைகள் பற்றி நல்ல அனுபவங்களைப் பெற்றிருப்பர். [க.தி.த 1621]

ஒருவகையில் குடும்பம் மனிதனின் வாழ்வை வளமாக்கும் ஒரு பல்கலைக்கழகமாகும். ஆனால் அதனுடைய வாழ்வும் பணியும் முழு மலர்ச்சி பெறவேண்டுமானால் அன்போடு கூடிய மண ஒன்றிப்பும் மண மக்களின் கூட்டு ஆலோசனையும், குழந்தைகளின் வளர்ப்பில் பெற்றோரின் கருத்தான ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றன. [இன்றைய உலகில் திருச்சபை 52]

**கிறிஸ்துநாதர் தமது மணப் பெண்ணான திருச்சபைக்குக் கொடுத்த புதிய உடன்படிக்கையின் கொடை நற்கருணையாகும்.**

### திருமண வாழ்வின் வெற்றி என்பது...

பிள்ளைகளைப் பெற்றெடுப்பது மட்டுமன்றி, பெற்றோர் பிள்ளைகளுடைய முதலாவதும், முக்கியமானதுமான ஆசிரியராவர். நல்லொழுக்கத்தையும், கிறிஸ்தவ பெறுமதிகளையும் உருவாக்குவோர் பெற்றோர்களே. வீட்டில் கல்வி மட்டுமல்ல, இறைவழிபாடும் நடக்கின்றது. குடும்பம் ஒன்றுகூடிச் செபிப்பதன் மூலம், திருமுழுக்கின் மூலம் பெற்றுக்கொண்ட பொது குருத்துவத்தை நடைமுறைப்படுத்துகின்றனர். வீட்டில் கிறிஸ்துவின் உண்மையான பிரசன்னத்தை அனுபவிக்க முடியும். “உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக்குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார். ஏனெனில் இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்”. (மத் 18.:20) (க.தி.த 165) ஆகவே இவற்றை மனதில் கொண்டு இறைவனுக்கு உகந்த குட்டித் திருச்சபையாகக் குடும்பத்தை வளர்ப்போம்

## திருமணம் என்பது...



தொடரும்

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

பேதுரு

### தவக்காலத்தின் 2வது ஞாயிறு (17.03.2019)

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் இரண்டாவது வாரத்தில் கால்பதிக்கும் திருஅவையின் இறைமக்களான நமக்கு இன்றைய திருவழிபாட்டு வாசகங்கள் எல்லா மனிதரிடத்திலும் இன்பம் துன்பம் உண்டு. இரவின்றிப் பகல் இல்லை, விதை மடியாமல் செடி இல்லை, முயற்சி இல்லாமல் வெற்றி இல்லை, மனவருத்தமின்றி மனமாற்றம் இல்லை, இறப்பின்றி வாழ்வு இல்லை, என்ற உண்மைகளை விளக்குவதாக அமைந்துள்ளன. இயேசுவின் உருமாற்றம் தந்தை கடவுளை மகிமைப்படுத்தியதுபோல நமது உள்ளத்தில் ஏற்படும் உருமாற்றமும் தந்தை கடவுளுக்கு மகிமை சேர்க்கக் கூடியதாக வேண்டும். ஆபிரகாம் கடவுளுக்கு உகந்தவராகவும் அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து வாழ்ந்தபடியாலும் அவருக்கு ஒரு பெரிய சந்ததியையும், ஒரு பெரிய நாட்டையும் உரிமையாகக் கொடுத்தார். இந்நிலையில் நாமும் கடவுளுக்காக எல்லாவற்றையும் துறக்க தயாராக இருக்கவேண்டும். எப்பொழுதும் இன்பமாய் இருக்க எண்ணாமல் துன்பங்களை துணிவுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய உருமாற்றம் நல்லதை உலகிற்கு கொண்டுவர வேண்டும்.

**முதல் வாசகம் : தொ.நூ 15:5-12,17-18,21**

கடவுள் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்தார்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவரே என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு.

**இரண்டாம் வாசகம் : பிலி 3:17-4:1**

கிறிஸ்து நம் உடலை மாட்சிக்குரிய தமது உடலின் சாயலாக உருமாற்றுவார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

ஒளிரும் மேகத்தினின்று தந்தையின் குரலொலி கேட்டது. "என் அன்பார்ந்த மைந்தர் இவரே இவருக்கு செவிசாயுங்கள்".

**நற்செய்தி வாசகம் : லூக் 9:28-36**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கருணைக் கடலே அன்பிறைவா! இறையாட்சியை அமைக்க பயணம் செய்யும் திருஅவையானது இத்தவக்காலத்தில் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் உளமாற்றத்திற்கான சரியான பாதையை காட்டி வழிநடத்தவும் கடவுளுக்காக எல்லாவற்றையும் துறக்கும் மனப்பான்மையை வளர்க்கவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

இரக்கத்தின் ஊற்றே அன்பிறைவா! இன்ப துன்பங்களை சமச்சீராக ஏற்று வாழும் மனநிலை எம்மில் உருவாகவும் எப்பொழுதும் இன்பமாய் இருக்க எண்ணாமல் துன்பங்களை துணிவுடன் எதிர்கொள்ளவும் மனித உணர்ச்சிகளுக்கும் ஆசைகளுக்கும் இடம் கொடுத்து வாழாமலும், ஒருவரை ஒருவர் மன்னித்து மறந்து அன்புசெய்து வாழவும் வேண்டிய உருமாற்றத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று...

உறவுகளுக்கெல்லாம் ஊற்றாகிய இறைவா! பொறாமையினாலும் குரோதத்தினாலும், பகைமையினாலும் பிரிந்து நிற்கும் எம் உறவுகள் எல்லாம் அன்பிலும் நீதியிலும் உண்மையிலும் உருமாற்றம் பெற்று உம்மை மகிமைப்படுத்தும் நேரிய வாழ்வாக மாறிடவும் எனது அன்பார்ந்த மக்களே என்று நீர் எம்மை அழைக்கவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

### தவக்காலத்தின் 3வது ஞாயிறு (24.03.2019)

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் மூன்றாவது வாரத்தின் முதல் நாளிலே இறைவனின் ஆலயத்தை நோக்கி வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே சகோதரர்களே! இவ்வுலகில் நாம் வாழும் வாழ்க்கை நமக்கு மனம்மாற வழங்கப்பட்ட வாய்ப்பு என இன்றைய நற்செய்தி நினைவூட்டுகின்றது. கடவுள் ஒருவரே கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளரும் ஒருவரே அவர்தான் நமதாண்டவர் இயேசுக்கிறிஸ்து. பரிந்துரை பரிவு, இரக்கம், கருணை, மன்னிப்பு எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ளுதல் என்பன கிறிஸ்தவ மதிப்பீடுகள் ஆகும். ஐயா இந்த ஆண்டும் இதை விட்டுவையும். நான் இதைச் சுற்றிலும் கொத்தி எரு போடுவேன் அடுத்தாண்டு கனி கொடுத்தால் சரி இல்லையேல்... என்ற வேலையாளின் பரிந்துரையை நாம் இன்று சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். எப்பொழுதெல்லாம் இஸ்ராயேல் மக்கள் வழி தவறிச் சென்றார்களோ அப்பொழுதெல்லாம் தண்டனை எனும் பிரம்பைக் கையில் எடுக்காதவர் நம் இறைவன். இந்த இக்கட்டான, இடையூரான இந்த உலகில் நம்மை நாளும் அனைத்து தீங்குகளிலிருந்தும் வழிநடத்துபவர் அவரே. எனவே இனியும் காலம் தாழ்த்தாது நாமும் மனம் மாறுவோம்.

**முதல் வாசகம் : வி.ப 3:1-8,13-15**

இருக்கின்றவராக இருக்கின்றவர் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 10:1-6,10-12**

மோசேயோடு மக்கள் பாலைநிலத்தில் நடத்திய வாழ்க்கை நமக்கு அறிவுபுகட்டும் படிப்பினையாக எழுதப்பட்டுள்ளது.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

"மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" என்கிறார் ஆண்டவர்.

**நற்செய்தி வாசகம் : லூக் 13:1-9**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அன்பின் திருஉருவே இறைவா! அருள் நிறைந்த காலமாகிய தவக்காலத்தில் இறைமக்களை மன மாற்றத்தின் ஊடாக நிலைவாழ்வை நோக்கி வழிநடத்தும் திருஅவையானது மக்கள் அனைவரும் இறைவேண்டல், ஈகை, நோன்பு ஆகியவற்றில் ஈடுபடவும், இறைத்திட்டத்தை நிறைவேற்றவும் உழைத்திட வரமருள வேண்டுமென்று...

இரக்கத்தின் உறைவிடமே அன்பிறைவா! மனிதன் எத்துணை பாவியாக இருப்பினும் அவன் மனம்மாற அவகாசம் தருகின்றார் என்பதை உணர்ந்தவர்களாக எமக்கு வழங்கப்பட்டுள்ள அவகாசத்தைப் பயன்படுத்தி உண்மையான மனமாற்றம் பெற்றிட வரமருள வேண்டுமென்று...

நிலைவாழ்வின் இருப்பிடமே அன்பிறைவா! இறையாட்சி வெறும் பேச்சில் அல்ல, செயலில் இருக்கிறது என்பதை நாம் உணரவும், இறைவன் நீதியின் தேவன் அவரது தீர்ப்பில் இருந்து நாம் தப்பமுடியாது என்பதை நினைவில் கொண்டு இத்தவக்காலத்தில் இருந்தே புது வாழ்வை நோக்கி நாம் பயணிக்க வரமருள வேண்டுமென்று...

### தவக்காலத்தின் 4வது ஞாயிறு (31.03.2019)

**வாசக விளக்கம்:** மனமாற்றத்தின் காலமான இத்தவக்காலத்தின் நான்காவது வாரத்தில் கால்பதிக்கும் நமக்கு அப்பா அனுபவத்தை சிறப்பாக விளக்கும் நற்செய்தியான ஊதாரி மகனின் உவமை கொடுக்கப்பட்டுள்ளது உறவு என்ற அச்சில் தான் இந்த உலகமே சுற்றிக் கொண்டிருக்கிறது. உறவில்லா வாழ்க்கையானது ஓர் உயிரில்லா உடம்பு போலவே இருக்கும் உறவுகளின் சங்கமமான இறைவனை நாம் விட்டுவிலகும்போது எம் வாழ்க்கை கேள்விக்குறியாகி விடுகின்றது. தந்தையின் உறவில் இருந்து பிரிந்து சென்ற இளையமகன் தன்நிலை உணர்கின்றபோது அறிவு தெளிந்தவனாய் இழந்த உறவைப் பெற்றுக்கொள்ள திரும்பி வருகின்றான். பாவத்தினால் இறை உறவை பிரிந்து நிற்கும் நாம் தெளிவுபெறுவது எப்போது? இறைவனோடு ஒப்புரவாக நமக்கு அருளப்பட்டுள்ள ஒப்புரவு அருட்சாதனத்தை நாம் பின்பற்றுகிறோமா? மனமாற்றத்தின் பொற்காலமான இத்தவக்காலத்தை நாம் வீணடிக்கலாமா? இளைய மகன்போல் தந்தையாம் இறைவனில் இணைய நாம் வரவேண்டாமா? சிந்தித்துச் செயல்பட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : யோசு 5:9,10-12**

வாக்களிக்கப்பட்ட நாடு சேர்ந்த இறைமக்கள் பாஸ்கா கொண்டாடினர்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்.

**இரண்டாம் வாசகம் : 2 கொரி 5:17-21**

கிறிஸ்துவின் வாயிலாக கடவுள் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய் "அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்" என்று அவரிடம் சொல்வேன்

**நற்செய்தி வாசகம் : லூக் 15:1-3,11-32**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைவனின் எல்லையில்லா இரக்கத்தை இறைமக்களுக்கு உணர்த்தி மனமாற்றத்தை நோக்கி வழிநடத்தும் திருஅவையையும் அதன் தலைவரான திருத்தந்தை ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர் அனைவரையும் ஆசீர்வதித்து அவர்களுக்குத் தேவையான உடல், உள, நலத்தைத் தந்தருள வேண்டுமென்று...

இன, மத, மொழி பேதங்களை வளர்த்து மனிதநேயத்தை சிதைத்து உறவுச் சிக்கல்களை உருவாக்கி வன்செயல் கலாச்சாரத்தை வளர்த்து வாழும் இன்றைய சமூக அவலங்களில் இருந்து எமது மக்கள் திருந்தி, மனம்மாறி, புதுவாழ்வை பெற்று இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் பெற்று வாழ்ந்திட வரம் அருள வேண்டுமென்று...

இத்தவக்காலத்தில் நாம் செபம், தவம், தர்மம் போன்றவற்றில் நாட்டம் கொள்ளவும், எமது இளைய சமுதாயம் தீய பழக்க வழக்கங்களில் இருந்து விடுபடவும், உண்மையான மனமாற்றம் பெற்று இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் பெற்றிடவும் மன்னிப்பதன் ஊடாக நமது நல்மனதை வெளிப்படுத்தவும் வரமருள வேண்டுமென்று...

## ஓட்டுனரே! ஒரு கணம் சிந்திப்பீர்.

வாகன ஓட்டுனரே,
வீதி விதிகளை மீறாதீர்,
விபத்து வந்த பின்
வருந்தாதீர், வருமுன்
காத்திடுவீர்.
மது போதையில்
மதி இழந்து, மனிதர்
மேல் மோதாதீர், மனித
நேயம் மறவாதீர்,
மறந்தேனும் மது
அருந்தாதீர்.
தூக்கத்தில்
தடுமாறி, தாறுமாறாய்
ஓட்டாதீர், மனித
உயிரின் பெறுமதி
உணர்ந்திடுவீர்
அதனை அறிந்திடுவீர்.
அலைபேசியில்
கதைபேசி, அவதானம்
இழந்து, ஆபத்தில்
அகப்படாதீர், வீண்
விபத்தை விலை
கொடுத்து வாங்காதீர்.
முந்தி
ஓட்ட முற்படாதீர்,
உயிர் வாழ்வுடன்
விளையாடாதீர். விபத்து
வந்த பின் வருந்தாதீர்.
வேகம் தவிர்ப்பீர்
விவேகமாய் ஓட்டுவீர்.
நீவீர்
நிதானமாய்
வாகனம் ஓட்டுவீர்,
விபத்து வராமல்
காத்திடுவீர், பாதையில்
பல உயிர்களைப்
பொறுப்புடன்
பாதுகாத்திடுவீர்.

**ஆக்கம்:**

**பென்ஜமின் சோமநாதர்.**

**தெஹிவளை.**

## சுய முயற்சி

### முயன்றால் முடியும்

அரசன் போட்டியை அறிவித்தார். அரண்மனையின் பெரிய கதவை காட்டி "இந்த அரண்மனையிலே மிக கனமான பெரிய கதவு இதுதான். இதைத் திறப்பது கடினம். என்னால் முடியவில்லை. யாராவது திறந்தால் பரிசு தருகின்றேன்" என்றார். எல்லாரும் பெரிய கதவைப் பார்த்து பிரமித்து "நம்மால் இது முடியாது" என்று சொல்லி ஒதுங்கிவிட்டார்கள். ஒருவன் மட்டும் கதவை பார்த்துவிட்டு முயற்சி செய்துதான் பார்ப்போம் என்று கதவிலே, கை வைத்தவுடனே திறந்துக் கொண்டது. ஏனென்றால் கதவு தாழ்போடாமலிருந்தது. அரசன் சிரித்துக் கொண்டே சொன்னார். "உங்களை சோதிப்பதற்கு திறந்த கதவையே திறக்கச் சொன்னேன். பலர் முயற்சி செய்யாமலே ஒதுங்கி விட்டார்கள். முயற்சி செய்தவன் வெற்றி பெற்றான் பரிசு அவனுக்குத்தான்.

**சிந்தனை :**

**வேடிக்கை பார்க்க ஆரம்பித்தால் எல்லாம் பிரமிப்புத்தான். முயற்சி செய்தால் எதுவும் சாதாரணம் தான்**

# மேய்ப்புப் பணி மடல்

# சட்டவிரோதமான போதைப்பொருளை ஒழிப்பதற்காக கர்தினால் அழைப்பு விடுக்கின்றார்.

**அன்புள்ள சகோதர சகோதரிகளே,**

1. 2016ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ம் திகதி, சமூக விஞ்ஞானம் தொடர்பான பாப்பிறை மேற்பார்வையின் கீழ் இயங்கும் நிறுவனம், 'போதைப்பொருள், உலகளாவிய பிரச்சினைக்கான தீர்வுகள்' எனும் கருப்பொருளைக் கொண்டு மேற்கொண்ட மாநாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், விஷமான போதைப்பொருளுக்கு அடிமையாவது 'அடிமைத்தனத்தின் புதிய உருவமாகும்' என குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், 'விஷமான போதைப்பொருளானது எமது சமூகத்தின் ஓர் காயமாக இருப்பதோடு சீரழிக்கப்பட்டு கொலை செய்யக்கூடிய விஷமாகவும் இருக்கின்றது. இப்போதைப்பொருளிலே தங்கி வாழ்கிறவர்கள் எண்ணிக்கையானது அதிகரித்துள்ளமை புதுமைப்பட வேண்டிய விடயமாக இல்லை காரணம்; "உலகத்தார் வழங்கும் தீவிர முயற்சியின் மூலம் நிலையற்ற மகிழ்ச்சியை நோக்கி பயணிக்க வாய்ப்பு கிடைக்கும்போது இறுதியில் அதிலிருந்து கிடைப்பது அற்ப சந்தோசமும் ஓர் விஷம் மற்றும் சீர்குலைக்கப்பட்ட மரணம் அடைவதாகும்"

அமெரிக்க ஐக்கிய இராஜ்யத்தின் கொலராடோ மற்றும் வாஷிங்டன் போன்ற இடங்களில் போதைப்பொருளை சட்டரீதியாக அங்கீகரித்துள்ளமையாகும். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முழுமையாக கண்டனம் தெரிவித்துள்ளார். "போதைப்பொருள் தொடர்பான பிரச்சினைகளுக்கு போதைப்பொருள் பரப்புவதனால் தீர்வு காண முடியாது என்பதை என்னால் தெளிவாக கூறமுடியும். போதைப்பொருளுக்கு அடிமையாவது தீச்செயலாக அமைவதுடன் இத்தீமைக்கு எவ்விதத்திலும் இடங்கொடுக்கவோ அல்லது தீர்வுகாணவோ முடியாது" என திருத்தந்தை குறிப்பிட்டார். (2014 ஆனி மாதம் 20ம் திகதி உரோமையில் இடம்பெற்ற 31வது சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு அமுலாக்க மாநாட்டில் இடம்பெற்ற மறையுரை) 2014 ஆனி மாதம் 21ம் திகதி இத்தாலியின் கலாப்பிராயிகில் இடம்பெற்ற திருப்பலியில் திருத்தந்தை அவர்கள் தெரிவித்த விடயங்களாவன, போதைப்பொருள் நடவடிக்கைகளில் ஈடுபடும் 'இன்தரன்கேட்டா' எனுமிடத்தில் பிரசித்தி பெற்ற மா∴பியா பாதாளக்குழுவினை திருச்சபையில் இருந்து விலக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். 'மா∴பியா குழுவோடு சேர்ந்து தொடர்ச்சியாக தீயவழியில் பயணிக்கும் நபர்கள் என்றும் இறைவனோடு சங்கமிக்க முடியாது. அவர்களை திருச்சபையிலிருந்து விலக்க வேண்டும் என தெரிவித்த திருத்தந்தை இத்தீமையுடன் நாளுக்கு நாள் போராடி எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்றார்.

## 2. இலங்கையில் போதைப்பொருள் பாவனை

போதைப்பொருள் பற்றிய கண்ணோக்குகையில் எமது தாய்நாடான இலங்கையும் இக்கொடூரமான தீவினையிலிருந்து விடுபடமுடியாமல் இருப்பது கவலைக்குரியதாகி உள்ளது. அரசாங்க கணக்கெடுப்பு அறிக்கையின்படி 2018ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஆனி மாதம்வரை, 1599 நபர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாக வைத்திய பரிசோதனைக்குள்ளானார்கள். இது வைத்திய பரிசோதனைக்காக வந்தவர்கள் மட்டுமே. அரச நிர்வாகிகள் மூலம் போதைப்பொருள் விநியோகிப்பு மற்றும் அவற்றை தம்முடன் வைத்திருந்தவர்களை கைதுசெய்த எண்ணிக்கையின் அதிகரிப்பு பாரதூரமாகும். 2018ம் ஆண்டின் முதல் ஆறுமாத காலங்களுக்குள் போதைப்பொருள் நிவாரண ஒன்றியத்தின்மூலம் இலங்கையில் 42,515 பேர்களை கைது செய்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதனுள் 16,768 (39.44%) பேர்கள் ஹெரோயின் விநியோகித்தலுக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் 24,746 (58.21%) பேர்கள் கஞ்சாவும் 9 பேர்கள் (0.16%) கொகெனும், 30 பேர்கள் (0.07%) ஹஸீஸ் பாவனைக்கும் பாபுல் மதன மோதக, புகைத்தூள் பாவனைமூலம் 892 பேர்களும் (2.10%) Methempheamine பாவனையின் நிமித்தம் 70 பேர்கள் (0.16) குற்றவாளிகளாக கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேற்கு மாகாணத்தில், 18,246 பேர்கள் கொழும்பில் 6,750 பேர்கள் கம்பஹா மாவட்டத்தில் 2,407 பேர்கள் களுத்துறை மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் உட்பட கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் 27,421 என தெரிவிக்கப்பட்டுள்ளது. முழு இலங்கையிலும் கைதுசெய்யப்பட்டவர்களின் வீதத்தில் 64.49%மாகும். இதற்கிணங்க போதைப்பொருள் விநியோகமானது கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் பாரியளவு பரவியுள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களில் போதைப்பொருளைத் தம்மோடு வைத்திருந்தோர், விநியோகித்தோர், ஹெரோயின் அல்லது கஞ்சா போன்ற போதைப்பொருட்களை இந்நாட்டிற்கு கொண்டு வருபவர்கள் என பலதரப்பினர் அடங்குகின்றனர்.

இதன்மூலம் எமது நாடும் விஷேசமாக உயர்மறைமாவட்டமும் மிகவும் கவலைக்குரிய,மோசமான நிலையில் உள்ளமை தெளிவாகிறது. நான் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டபோது, போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுள் பெரும்பாலானோர் கத்தோலிக்க இளைஞர் - யுவதிகள் என்றார். இது கவலைக்குரியதாவதுடன் மேலும் அதிகரிக்கும் நிலையும் தென்படுகிறது. அநேகமாக அரசியல் பாதுகாப்பு அனுமதியுடனான பாரிய போதைப்பொருள் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரினால் நாட்டிற்குள் கொண்டுவருவதுடன் பாடசாலை மாணவர்களையும் அடிமைப்படுத்த குறிபார்த்து வைத்துள்ளனர். 2018ல் மட்டும் அரசினால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் அளவு கி.கி.800க்கு மேற்பட்டதாக உள்ளது. தொடர்ந்து வெளிநாட்டு தலைவீட்டு மூலம் இவ்வியாபாரம் அதிகரித்து வருகின்றது.

## 3. சட்டரீதியற்ற போதைப்பொருள் எவை?

உண்மையிலேயே வாழ்வை சீர்குலைக்கும் இப்போதைப்பொருட்கள் எவை? அவற்றை பயன்படுத்துவதனால் நிகழ்வது என்ன? எனும் வினாக்கள் எம் கண்முன்னே எழுகின்றன. இப் போதைப்பொருட்கள் ஏழு வகைப்படும்.

**அ.** முதலாம் வகை Cannabinoids, இதில் ஹசீஸ் மற்றும் மரிஜுவானா என்பன அடங்கும். இதனை பயன்படுத்துகையில் உடனடி திருப்தி ஏற்படுவதோடு அதிகமுச்சு இழுப்பு ஏற்பட்டு உடலை யும் பலவீனமாக்கும். உறவுகளுக்கு பங்கம் ஏற்படுவதுடன் தெளிவற்ற மந்தமான நிலையும் உடல் உறுப்புக்களை செயலிழக்கச்செய்யும். இதயத்துடிப்பின் வேகம் அதிகரிப்பதுடன் உடல் பெலவீனமாகிறது.

**ஆ.** இரண்டாம் வகை Opioids இதில் ஹெரோயின் மற்றும் அபின் என்பன அடங்கும். இதனை பயன்படுத்துகையில், உடனடி திருப்தியும் மயக்கநிலையும் ஏற்படும். இதயத் துடிப்பின் வேகம் அதிகரிப்பதுடன் உடல் உறுப்புக்களை பலவீனப்படுத்துவதுடன் தலைசுற்றல், குமட்டல் போன்றவை ஏற்படும்.

**இ.** மூன்றாம் வகை Stimulants இது மந்த நிலையாக்கும். Amphetamine Methamphetamine, போன்றவை அதிவேக இதய துடிப்பு, உயர் இரத்த அழுத்தம், உயர் உடல் வெப்பநிலையுடன் கவலை, திடுக்கிடுதல், சித்தப்பிரமையும் ஏற்படும்.

**ஈ.** நான்காம் வகையானது ஆண்- பெண் இருபாலாரும் சேரும் பொது இடங்களில் Club Drugs பயன்படுத்தப்படுகிறது. இவை MDMA Flunitrazepam) GHB மந்த நிலைக்கு இட்டுச்சென்று சோம்பேறித்தனம், நடுக்கம், நிலைகுலைவு, மறதி நிலையையும் ஏற்படுத்தும்.

**உ.** ஐந்தாம் வகை. Ketamine (PCP) Analogs. Saliva Divinonum எனும் Dextromethophan போன்றவை அதிகூடிய போதைபாவனையான ஒருவரை உற்சாகமான உணர்வுக்குள் கொண்டுசென்று பின்பு உடலையும் மனதையும் பெலவீனப்படுத்தும்.

**ஊ.** ஆறாம் வகை. Hallucinogens ஆகும். இதனால் அதிக உடல் வெப்பநிலை, அதிக இரத்த அழுத்தம், அதிக இதயத்துடிப்பு, உணவில் வெறுப்பு, நரம்புத்தளர்ச்சி என்பனவும் ஏற்படும்.

**எ.** ஏழாம் வகை. Other Compounds என்பதாகும். (Anabolic steroids, inhalants எனப்படும். இவை அதிக இரத்த அழுத்தம், இரத்தம் கட்டியாதல், புற்றுநோய், வைரநிலை, இதய நோய் மற்றும் நரம்புத்தளர்ச்சி, திடீர் மரணம் போன்றவை ஏற்படும். உணர்ச்சிகளைத் தூண்டும்.

## 4. போதைப்பொருளும் வன்முறையும்

போதைப்பொருளுக்கு அடிமையானோர்இறுதியில் இதிலிருந்து மீள்வதற்கு முடியாது, வாழ்வையே அழித்துக்கொள்கின்றனர். இவ்வாறானவர்களினால் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கே பாதிப்பு ஏற்படுகிறது. 1991ல் அமெரிக்காவில் நீதிமன்ற அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு இணங்க, போதைப்பொருளை பாவிக்காதவர்களுக்கும் அண்மித்த நிலையில் ஈடுபடும் நிலை அதிகரித்துள்ளதோடு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு சிறைச்சாலையில் உள்ளவர்களுள் பெரும்பாலானோர் அச்சந்தர்ப்பங்களில் போதைப்பொருளை பாவித்தவர்களாய் இருக்கின்றனர் என்றும் போதைப்பொருள் பாவனையினால் வன்முறைகள் அதிகரித்துள்ளன என்றும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (புரட்டாதி Sep) 1994 NC 149 288) 2015ல் ஊழல் மற்றும் போதைப்பொருள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் காரியாலயத்தினால் தெரிவித்த அறிக்கையின்படி, சட்டரீதியற்ற போதைப்பொருள் சந்தையினூடாக 2003ம் ஆண்டில் 321.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளது என குறிப்பிட்டுள்ளது. அது, சராசரி தேசிய சந்தையின் வியாபாரத்தின் 1%ற்கு அண்மித்துள்ளது.

### 2017ம் ஆண்டுக்கான அறிக்கைப்படி:

- விஷமான போதைப்பொருளை தடுப்பூசியினால் ஏத்துபவர்கள் 1.6 மில்லியன் என்றும் அவர்கள் எயிட்ஸ் நோயாளிகள் என்றும்
- 6.1 மில்லியன் பேர்கள் ஹெற்படைடிஸ் (Hepatitis) நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும்
- 1.3 மில்லியன் பேர்கள் எயிட்ஸ் மற்றும் Hepatitis நோயுள்ளவர்கள் என்றும்
- போதைப்பொருளை தடுப்பூசி மூலம் செலுத்துபவர்களுள் 8% ஆனோர் காசநோயுள்ளவர்கள் என்றும், உலக சனத்தொகையில் அந்நோய்குட்பட்டவர்கள் 0.27% உள்ளனர்.
- 2015ல் போதைப்பொருள் பாவனையால் 190, 000 பேர்கள் மரணமடைந்துள்ளனர் என்றும் வெளியிட்டுள்ளது.
- வருடத்தில் உலகம் பூராகவும் 11 மில்லியனுக்கும் அதிகமானோர் போதைப்பொருளை தடுப்பூசி மூலம் பாவிக்கின்றனர் என்றும், இதில் 1.3 மில்லியன் பேர்கள் Hepeatitis) மற்றும் HIV நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

எனவே நாம் இணையத்தளத்தில் இதனை கண்ணோக்கும்போது இதனால் தற்கொலை செய்யவும், மரணம் அடைந்தவர்களையும் பற்றி தேடுகையில் அவர்கள் நடிகர், நடிகைகளாயும், பாடகர்களாயும் இசையமைப்பாளர்களாயும் கலைஞர்களாயும் இருக்கின்றனர். எம் நாட்டிலும் உயர்மறைமாவட்டத்திலும் போதைப்பொருள் பாவனையால் நிந்திக்கப்படுபவர்கள், அவர்களது குடும்ப அங்கத்தவர்களையும் பெற்றோர்கள், மற்றும் பிள்ளைகளையும் இருக்கிறார்கள். இவர்கள் நாளுக்கு நாள் துன்பத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. போதைப்பொருளின் ஆதிக்கம் இன்று பாடசாலைகளிலும் இருப்பதோடு, அவர்களை போதைப்பொருள்



விநியோகிப்பதற்கும் பயன்படுத்துவது கவலைக்குரிய விடயமாகவுள்ளது. இவ்வாறாக பாதிக்கப்படுபவர்கள் எம் தாய் நாட்டில் எதிர்கால சந்ததியினர்தானே. கத்தோலிக்கர்கள் எனும் விதத்தில் இதற்கு நாம் எவ்வாறு முகங்கொடுக்க வேண்டும்?

## 5 இறைவார்த்தைகள்

மதுபானம், போதைப்பொருள், நீலப்படங்கள், சூது, புகைத்தல் போன்றவற்றுக்கு அடிமையாதல் மற்றும் உணவுப்பேராசை போன்றவை சிலைவழிபாடாகும். “என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தலாகாது” என்பது முதற்கட்டளையாகும். இரண்டாம் கட்டளை “நீ அவற்றிற்கு வழிபாடு, பணிவிடை செய்ய கூடாது” (வி.ப 20:3-4) ஒருவர் ஏதேனும் ஒன்றுக்கு அடிமையாகும்போது அதனையே தெய்வமாக்கிக் கொள்வதுடன் அதற்கு வழிபடவும் பணிவிடை செய்யவும் நேரிடும். இது நிச்சயமாக ஓர் சிலைவழிபாடாகும். “பொல்லார் தம் குற்றச் செயல்களில் தாமே சிக்கிக்கொள்வர்; தம் பாவ வலையில் தாமே அகப்பட்டுக்கொள்வர். கட்டுப்பாடு இல்லாததால் அவர்கள் மடிந்து போவர்; தம் மதிகேட்டின் மிகுதியால் கெட்டழிவர்” (நீதி மொ. 5:22-23) அன்றாட செயற்பாடுகளின் போது நன்மை தீமைகளை பற்றி அறிந்து தெளிந்த புத்தியுடன் இருப்பதன் பயன்களைக் குறித்து புனித பவுலடிகளார் “எல்லாவற்றையும் செய்ய எனக்கு உரிமையுண்டு; ஆனால் எல்லாம் நன்மை தரக்கூடியவையல்ல; எல்லாவற்றையும் செய்ய எனக்கு உரிமை உண்டு; ஆனால் எதற்கும் நான் அடிமையாகிவிட மாட்டேன்” (1கொரி 6:12) என குறிப்பிடுகின்றார்.

எனவே இவ் இறைவார்த்தைகள் எமக்கு தெளிவாக எடுத்தியம்புவது, கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் செய்ய வேண்டியது எல்லாவிதத்திலும் சுயநலப்போக்கிலிருந்து விலகி தம் தலையை சாய்ப்பதற்குக் கூட இடமில்லாமல் இருந்த (மத் 8:20) இயேசு கிறிஸ்துவின் குரலுக்கு செவிசாய்ப்பதோடு அவருக்கு உகந்த வாழ்க்கை வாழ்வதாகும்.

## 6 தேசிய ரீதியிலான சவால்

அபாயகரமான நிலையை முறியடிக்க, எம் இலங்கை நாட்டின் மதிப்புக்குரிய ஜனாதிபதி இப்போதைப்பொருளுக்கு எதிராக போர்தொடுப்பதற்காக எம் எல்லோரையும் அழைப்பதோடு போதைப்பொருளுக்கு எதிரான பிரச்சாரத்தை முன்னெடுக்க ஓர் தேசிய பணியகத்தை நிறுவி, இளைஞர்-யுவதிகளை பயிற்று-விக்கும் மற்றும் அவர்களுக்கு அறிவுரை வழங்கும் செயற்திட்டத்தையும் போதைப்பொருள் நடவடிக்-கைகளுடன் தொர்புடையவர்களை கைது செய்தல் மற்றும் கேரளா கஞ்சா ஹேரோயின் கொக்கேன் போன்றவற்றில் பாரிய அளவுத்தொகையை அரசினால் கைப்பற்றி ஆற்றும் அளப்பரிய சேவையைக் குறித்து நாம் பெருமைப்படுகின்றோம். எனினும் அதன்மூலம் நாம் திருப்தியடைய முடியாது. பெறுமதியான இளைஞர்-யுவதிகளின் வாழ்க்கை பணயம் வைத்து, கறைபடிந்த பணத்தை உழைக்கும் மனசாட்சியே இல்லாத வஞ்சக உள்ளத்தினருக்கு தண்டனைப் பெற்றுக்கொடுப்பதற்கு நாம் மேலும் தீவிரமாக முயற்சி செய்ய வேண்டும். மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்களினால் எடுக்கப்பட்ட இம்முயற்சிகளுக்கும் இவற்றிக்கு பங்களிக்கும் அனைவருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்-கொள்வதோடு, உரிய அதிகாரிகளுக்கு பங்களிப்பு வழங்குவதோடு இப்போதைப்பொருளை முற்றும் முழுதாக எம் நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்கு பங்களிப்பு வழங்கும்படி அனைத்து கத்தோலிக்க இறைமக்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் இவ்வாறு செய்வது கத்தோலிக்கர்களாகிய எமது கடமை-யாகும். மேலும் கத்தோலிக்கர்களில் ஒருவர் போதைப்பொருள் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளாரெனில் அவரின் பாவநிலையானது மிகவும் பாரதூரமானதாகும். இறைவன் எமக்கு கற்பிப்பது, ஒருவரின் வீழ்ச்சிக்கு இன்னு-மொருவர் காரணமாக இருப்பாராயின் அவரின் கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது எனக் கூறுகின்றார். (மத் 18:6, மாற் 9:42, லூக் 17:12)

## 7வது எமது கடமை

கத்தோலிக்கர்கள் எனும் அடிப்படையில் எமது பொறுப்புக்களை இவ்வாறு வரிசைப்படுத்தலாம்.

1. இக்கொடூரமான ஆபத்தில் இருந்து எம் நாட்டை மீட்டெடுக்கும் வரை நாட்டுத் தலைவர்கள் முன்னெடுத்துக் கொண்டிருக்கும் செயற்திட்டங்களில் தொடர்ச்சியாக நிலைத்திருந்து அதற்காக முழுமை-யான அர்ப்பணத்துடன் செயற்படுவதற்கான அருளை இறைவன் பொழிந்தருள வேண்டுமென மன்றாடு-வோம்.
2. இரத்தக்கரைப்படிந்த பணத்தைக்கொண்டு கீழ்த்தர-மான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்கள் பற்றி, உண்மையான தகவல்கள் அறிந்திருப்பின், அவைபற்றி தகுந்த நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துவதற்கு செயற்படல்
3. இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் கத்தோலிக்கர்-களாயின், அவர்களது கத்தோலிக்க உரிமையான திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்ளல் அல்லது, மயானத்தில் கத்தோலிக்க முறைப்படி நல்லடக்கம் செய்தல் போன்றவற்றிற்கு தடைவிதிப்பதுடன் அவர்களை ஆலயத்திலிருந்து விலக்கி வைக்க வேண்டும்.
4. அரசாங்கத்தின் அல்லது வேறு நிறவனங்கள் மூலம் இச்சீர்கேட்டை முறியடிப்பதற்கு நிறுவப்பட்ட நிறுவனங்கள் அல்லது செயற்திட்டங்கள் குறித்து கத்தோலிக்க மக்களுக்கு அறியப்படுத்துவது முக்கியவிடயமாவதோடு அதனை பங்கு மட்டத்தில் ஒழுங்குசெய்து நடைமுறைப்படுத்தலாம். மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்காக, பங்கில் திறன்மிக்க குழுவொ-ன்றினை ஆயத்தம் செய்ய பங்குத்தந்தை முன்நின்று செயற்படுவது அவசியமாகும்.
5. உலக போதைப்பொருள் ஒழிப்பு தினமான ஆனி மாதம் 26ம் திகதியிலோ அல்லது அத்திகதிக்கு நெருங்கிய தினங்களிலோ பங்கிலுள்ள குழுக்களுடன் ஒன்றிணைந்து, செபவழிபாடுகள், ஊக்குவிப்பு செயற்பாடுகள் போன்றவற்றினை ஏற்பாடு செய்தல்
6. போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள எம் பிள்ளைகளை அதிலிருந்து மீட்டு எடுப்பதற்கான பொருத்தமான புணர்வாழ்வு செயற்திட்டங்களை வழங்குவதற்கு ஒழுங்கு செய்தல்.
7. பங்குத்தந்தையின் தலைமையில் இளைஞர்கள்-யுவதிகள் பங்கு மட்டத்தில் அறிவுறுத்தல் திட்டங்-களை நடைமுறைப்படுத்தல்
8. தம் பிள்ளைகளை குறித்து விழிப்புணர்வுடன் செயற்படு-வதற்கும், அபாயகரமான நிலைக்குள் சிக்காதவாறு அவதானத்துடன் செயற்படுவதற்கான விழிப்புணர்வு திட்டங்களை பெற்றோருக்கு வழங்குதல்.

## 8 தீர்மானம்

உலகம் முழுவதும் புரையோடியுள்ள இந்நிலை சுயநல போர்வழிகளின் ஆதிக்கங்களினால் இளைஞர்-யுவதிகள் தெரிந்துகொண்டே தம் வாழ்வினை சீரழித்துக்கொல்லும் அளவுக்கு பரப்பப்பட்டுள்ளது. இத்தீவினை; தீவிரவாதம், பாதாள கோஷ்டிகள் மற்றும் கிளர்ச்சியாளர்களோடு தொடர்பு கொண்டுள்ளது. கத்தோலிக்கர்களாகிய நாம் இதனை சாத்தானின் செயல் என்றே கூறவேண்டும். போதைப்பொருள் பாவனை ஒருவனை அடிமையாக்குவதுடன் அவனின் அவளின் விருப்பத்திற்கு மாறாக உயிர்க்கொல்லிக் கைதிகள்போல் சிறைப்படுத்தப்படுகிறார்கள். ‘அலகை-யின்’ விருப்பதிற்கேற்ப அதன் பிடியில் வாழும் அவர்கள் அதன் கண்ணுக்குத் தப்பி மனத்தெளிவு பெறக்கூடும்’ (2தீமொ 2:26) எனும் வார்த்தைகள் மூலம் புனித பவுலடிகள் தீமோத்தியருக்கு எழுதிய கடிதத்தில் கருத்து தெரிவித்துள்ளார். சாத்தானின் போராட்டமானது நியாயமாக அல்லது நீதிநேர்மையுடன் நடைபெறாது. இறைவனுக்கு நன்றி கூறுவதற்காக இயேசுகிறிஸ்து இவ்வுலகிற்கு வந்து சிறைப்பட்டோரை விடுதலை செய்யவும், அடிமைகளுக்கு விடுதலையும் அளித்து அடிமை நிலையிலிருந்து மீட்பு பெற்றுக்கொடுக்கவுமே. இறையரசைப் பெற்றுக்கொள்வதற்காக லௌகீக, காம நெருப்பிலிருந்து விடுதலைபெற இயேசு எமக்கு கற்பித்துள்ளார். புனித பவுலடிகள் ‘திராட்சை மது, அருந்திக் குடிவெறிக்கு ஆளாகாதீர்கள். இது தாறுமாறான வாழ்வுக்கு வழிகோலும். மாறாக தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுங்கள் (எபேசி 5:18) என்றார். அதற்கேற்ப பிறருக்கு உதவிகள் செய்யும் கிறிஸ்தவ சீடத்துவத்திற்கு உயிருட்டமளிப்பதற்கு நாம் முயற்சி செய்வோம்.

## 9 எதிர்ப்புப் போராட்டம்

இப்பிரச்சினையின் கொடூரமான விளைவு தொடர்பாக கத்தோலிக்க விசுவாசிகளைப் போன்றே, நாட்டு மக்களும் அறிந்திருக்க வேண்டியதாவது, கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் விசேட செபவழிபாட்டு தினமும் எதிர்ப்பு ஊர்வலமொன்றும் 2019ல் பங்குனி மாதம் 31ம் திகதி ஒழுங்கு செய்யுமாறு அனைத்து பங்குகளிடமும் நிறுவனங்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

**அ.** இயலுமானால் பங்கு மக்களின் பங்கேற்போடு 2019 பங்குனி 31ம் திகதி ஞாயிறு தினம் காலை திருப்பலியை ஒப்புக்கொடுத்தபின் போதைப்பொருளுக்கு எதிராக பதாதைகள், பிரசுரங்கள் (பெண்கள்-Banners) போன்றவைகளை ஆலய வளாகத்தில் பிரதான பாதைக்குச் சென்று அரை மணிநேரம் அங்கு மௌனமாக எதிர்ப்பைத் தெரிவிக்கவும்.

**ஆ.** எதிர்ப்பு ஊர்வலத்தில் பங்குகொள்ளுமாறு பிறமதத்-தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

**இ.** போதைப்பொருளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வண்ணம் அமைந்த பதாதைகளை ஆலய வளாகத்திலும் நிறுவனங்களிலும் பிரசுரிக்கவும்.

**ஈ.** வடகொழும்பு மற்றும் வத்தளைப் பிரதேசங்களிலுள்ள மதத்தலைவர்கள் மற்றும் இவ்விடயத்திற்காக பங்களிக்கும் நபர்களுடன் எனது தலைமையில் ஒழுங்குசெய்யப்படும் விசேட போதைப்பொருள் எதிர்ப்பு ஊர்வலமொன்று சில பிரதேசங்களிலிருந்து பி.ப. 2.00 மணிக்கு ஆரம்பமாகி மோதரை விஸ்ட்வயிக் மைதானத்தில் வந்து நிறைவடைவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதல் குழுவானது, கொழும்பு லுனுபொக்குன அளுத்மாவத்தை சந்தியில் (இப்பாகவத்தை) ஆரம்பமாகி, மோதரை வீதியினூடாக விஸ்ட்வயிக் மைதானத்திற்கும்,...

15








# இரக்க செயல்கள்

## இயேசு செய்ததையே இவர்கள் செய்தனர்






### கிறிஸ்துவின் அன்புக்கு சாட்சிகள்

ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள காங்கோ நாட்டில் கிறிஸ்தவ மறையைப் போதிக்கும்படி சில ஆண்டுகளுக்கு முன் மறைபோதகர்கள் சென்றனர். கடவுள் உலக படைப்பு, மனிதனது பாவம், பாவப்பரிகாரம் தவம் இவற்றைப் பற்றி அவர்கள் போதித்தார்கள். மக்கள் மரியாதையுடன் செவி கொடுத்தனர். எவரும் கிறிஸ்தவராகவில்லை.


சில ஆண்டுகளுக்குப் பின் வேறு சில போதகர்கள் சென்றனர். அவர்களது போதனையை கேட்டவர்களில் யாரும் கிறிஸ்தவ மறையில் சேரவில்லை. சற்றுப் பின் இரு குருக்கள் போய் மக்களிடையே வாழ்ந்தனர். காயப்பட்டவர்களின் காயங்களுக்கு மருந்து கொடுத்தனர். தொழு நோயாளிகளின் புண்களைக் கழுவினர். அவர்கள் போதிக்கத் தொடங்கும் முன்னரே பலர் கிறிஸ்தவர்களாயினர். தங்கள் அன்புச் செயல்களால் குருக்கள் அவர்களை மனந்திருப்பினர்.

பாலஸ்தின நாட்டில் பல நூறு ஆண்டுகளுக்கு முன் இயேசு செய்ததையே இவர்கள் செய்தனர்.

**ஏழைகள் மீதும் துன்புற்றோர் மீதும் பரிவு காட்டினர்.**

தம்மிடம் வந்தவர்களிடம் !நான் செய்வதைப் பாருங்கள் என இயேசு மொழிந்தார். இங்கு கூடியிருக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லோரும் நான் கிறிஸ்தவன் கிறிஸ்துவைப் போல் பிறரை அன்பு செய்கிறேன், என்று சொல்லக்கூடுமா? இரக்கம் காட்டாதவனுக்கு இரக்கமற்ற தீர்ப்பு தான் கிடைக்கும். இரக்கம் காட்டுபவன் தீர்ப்புக்கு அஞ்ச வேண்டியதில்லை யாக. 2:13)

**நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு தீயில் போடப்படும் [மத். 15:10]**



சந்தோஷ், தரம் 07, இராஜகிரிய

## புனித மரியா




இவர் சாதாரண பெண்ணாக இருந்து பின் இறைவனின் அழைப்பை ஏற்று இயேசுவுக்கு தாயானார். இவர் சென்ம பாவம் இன்றி பிறந்தவர். சூசை இவருக்கு துணையாக வாழ்ந்து வந்தார். இறைவனுக்கு கீழ்ப்படிந்து இறைவன் மீது விசுவாசம் கொண்டு திருமணம் ஆவதற்கு முன்பாகவே இறைவனின் அருளால் கருவுற்றார்

கபிரியேல் வானதூதர் மரியாவுக்கு மங்கள வார்ததை கூறி இயேசுவின் தாய் என்பதை எல்லோருக்கும் அறிக்கையிட்டார்.

இயேசுவுக்கு ஒரு நல்ல தாயாக மரியா இருந்தார். அமைதியும், பொறுமையும், சாந்தமும் தன்னடக்கமும் இறை நம்பிக்கையும் இறை அருளும் நிறைந்து இருப்பவர். எமது வேண்டுதல்களையும் மன்றாட்டுக்களையும் இறைனிடத்தில் பரிந்து பேசுபவர்.

இயேசு இறப்பதற்கு முன்பாக இவரை உலகில் உள்ள எல்லா உயிர்களினதும் தாய் என்று கூறினார். உடலாலும் உள்ளத்தாலும் தூய்மை நிறைந்த இவர் புனிதை என்று பட்டம் சூட்டப்பெற்றார். நானும் மரியாளைப் போல நற்பண்புகளையும் இறை அன்பையும் விசுவாசத்தையும் கொண்டு வாழ புனித மரியாளிடம் வேண்டிக் கொள்வோம். தினமும் செபமாலை சொல்வதன் மூலமாக இவரிடம் நெருங்கி செல்வோம். J. கிசோன் – தரம் 08, இராஜகிரிய பங்கு



ருக்ஷான், தரம் 07,

## அருட்சாதனங்களை அறிந்துக்கொள்ளல்

**அருட்சாதனங்களைக் கொண்டாடுவோம்**

**திருமுழுக்கின்போது நீர் வானகத் தந்தையின் மகன், மகனாகப் பிறக்கிறீர்**

ஒருவர் மீண்டும் பிறவாதிருந்தால் இறையாட்சிக்குள் நுழைய முடியாது என்று இயேசு சொல்லியிருக்கின்றார். குழந்தை ஒருவரை அவரின் பெற்றோர் திருமுழுக்குக்கிற்காக ஆலயம்கொண்டு வரும்போது, இவரின் பெற்றோரும், ஞானப் பெற்றோரும் இவருக்காக விசுவாச அறிக்கை செய்கிறார்கள். இவர்களின் விசுவாசத்தில், குருவானவர் குழந்தையின் தலையில் மும்முறை திருநீர் ஊற்றி, தந்தை மகன் தூய ஆவியாரின் பெயரால் நான் உன்னைக் கழுவுகிறேன் என்று சொல்லி இவருக்குத் திருமுழுக்கு வழங்குகிறார். இது இவருக்கு இறையாட்சிக்குள் நுழைவதற்கான ஒரு புதிய பிறப்பு, நீரும் இவ்வாறுதான் உம் பெற்றோரினதும், ஞானப்பெற்றோரினதும் நம்பிக்கையில் முன்னொரு நாள் திருமுழுக்குப் பெற்றீர். இதனால் நீர் இப்போது

**வானகத் தந்தையின் மகன், மகளாக இருக்கிறீர்**
**பிறப்பால் வரும் பாவத்தில் இருந்து கழுவப்பட்டுள்ளீர்,**
**கத்தோலிக்க திருச்சபையில் உறுப்பினராய் இருக்கிறீர்,**
**தூய ஆவியார் குடியிருக்கும் ஆலயமாக இருக்கிறீர்,**
**திருப்பலி ஒப்புக்கொடுக்கத் தகுதி பெற்றுள்ளீர்.**

தொடரும்

அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)



P. டேஷா தரம் 07,

## விவிலியப் பகுதி



### மத்தேயு நற்செய்தி

**அதிகாரம் 1 முதல் 14 வரை**

61. யாரிடம் முகம் கோணக் கூடாது?
62. விண்ணக தந்தைப் போல் நாம் எவ்வாறு இருக்க வேண்டும்?
63. வலக்கை செய்வது இடக்கைக்கு தெரியாமல் நாம் என்ன செய்ய வேண்டும்?
64. மண்ணுலகில் எதை சேமித்து வைக்கக் கூடாது?
65. உடலுக்கு விளக்கு எது?
66. கண் நலமாயிருந்தால் எது ஒளிபெற்றிருக்கும்?
67. அனைத்திற்கும் மேலாக எவற்றை நாட வேண்டும்?
68. தூய்மையானதை எவற்றிற்கு கொடுக்க கூடாது?
69. எந்த வாயில் வழியே நுழைய வேண்டும்?
70. இடுக்கமான வாயில் எது?
71. யாரை குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்?
72. நல்ல கனி கொடுக்கும் மரம் எது?
73. யார் யாரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வர்?
74. அறிவாளி யார்?
75. ஐயா நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும் என இயேசுவிடம் கூறியவர் யார்?

தொடரும்

விடைகள் 15ம் பக்கம்

## வர்ணம் தீட்டுக.



**சிறுவர்களே! உங்கள் ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**ஞானஒளி, இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08. மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com**

மாணவர் ஒளி



# உன்னோடு ஒரு நிமிடம்



## அஞ்சாதே நண்பா! நீ என் அன்புக்குரியவன்

அஞ்சாதே நண்பா!
தாழ்வான இடத்தையே
நீர் போய்ச் சேரும்
ஆனால் நீருள்ள
இடத்தையே வேர்
ஊறிச் செல்லும்
அறிவாயா நண்பா?
நீ, நீர் நான் வேர்
நீ விலகிச் சென்றாலும்
நான் தேடி வருவேன்
ஏனெனில் நீ என்
அன்புக்கு உரியவன்.

நீண்ட அலகால்
கொத்தியதால் என்
மரத்தின் மையத்தில்
ஓட்டை.

வெயிலுக்கும் மழைக்கும்
இருப்பிடமாகிறேன்.

கனிகளின் காலத்தில்
பசியாற்றுகிறேன்.

எச்சமிடுகின்ற போதும்
இலைகளால்
துடைத்துக்கொள்கிறேன்.

அஞ்சாதே
மரங்கொத்தியே இன்னும்
இடமிருக்கிறது
இதயத்தையும் கொத்தித்
தின்ன.

ஏனெனில் நீ என்
அன்புக்கு உரியவன்.

நான் உன்னை அன்பு
செய்கின்றேன்
நான் உன்னை அன்பு
செய்யாமலிருக்க முடியாது
எனது தனித்தன்மையே
நான் உன்னை
எப்பொழுதும்
அன்பு செய்வதுதான்.

உன் மீது சினம்
கொள்பவன் நான் அன்று,
உன்னைத் தண்டிப்பவனும்
நான் அன்று,
நீ ஒரு குற்றவாளி என
தீர்ப்பளிப்பவனும் நான்
அன்று,

உமது தீவினையில்
மகிழ்பவன் நான் அன்று,
உன் நோயில் மகிழ்ச்சி
அடைபவன் நான் அன்று,
உனக்கு வரும்
பொல்லாங்கைப் பார்த்து
மகிழ்பவன் நான் அன்று,

என் சாயலாகவே
படைக்கப்பட்ட உனக்கு
கெட்டது நடக்க வேண்டும்
என விரும்ப மாட்டேன்.

என் குழந்தைகளுக்குத்
துன்பத்தையா நான்
அனுப்புவேன்?
என் குழந்தைகளுக்கு
தீங்குகளையா நான்
விரும்புவேன்?

நான் அன்பு செய்யும்
என் பிள்ளைகளுக்கு
சிலுவைகளையும்
பாரங்களையுமா நான்
அனுப்புவேன்?
என் பிள்ளைகளை நானே
கண்டனம் செய்வேனா?

உன் கடந்த காலக்
குற்றங்குறைகளை
நான் ஒருபோதும்
பதிவு செய்ததில்லை.
கடந்தக்காலத்
தோல்விகளை
நான் பதிவேட்டில்
எழுதியதில்லை.

நான் என் மக்களுக்கு
வளமான வாழ்வை
வழங்குவேன்
வாழ்வின் வழியைக்
காட்டுபவன் நான்
உன்னை அன்பு மட்டும்
செய்கிறேன்.

உன்னை அன்பு
செய்வதுதான் என்
இயல்பு உன்னை அன்பு
செய்வதுதான் எனது
மகிழ்ச்சி

காணாமற் போன மகன்
காணாமற் போன, ஆடு
போன்ற உவமைகள்
நான் எவ்வாறு உன்னை
அன்பு செய்கின்றேன்
என்பதைத்தான்
எடுத்துக்காட்டுகின்றன.

எனக்கு உன் மேல்
உள்ள அன்பு
காலத்தால் மாறுவதன்று
எனக்கு உன்மேல்
உள்ள அன்பு உன்
செய்கைகளால்
மாறுவதன்று

எனக்கு உன்மேல்
உள்ள அன்பு கடலைவிட
ஆழமானது
வானத்தைவிட உயர்ந்தது
உலகை விடப் பரந்தது.
எனவே! அஞ்சாதே
இனிமேல் அழாதே
அமைதியாயிரு!
ஏனெனில் நான்
உன்னோடு
இருக்கின்றேன்

***

**தவக்காலத்தின் இறுதி இரண்டு கிழமைகளிலாவது தொலைக்காட்சி பார்ப்பதை குறைப்போம். திறன் கையடக்க தொலைபேசி (*smartphone*) பயன்பாட்டை குறைப்போம். இணையத்தில் செலவழிக்கும் நேரத்தை குறைப்போம். கம்பியூட்டரில் செலவிடும் நேரத்தை குறைப்போம்.**



# நோன்பு - பார்வை

அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து [அமதி]

சிறுவனாக இருந்தபொழுது தவக்காலத்தில் ஓர் குறிப்பிட்ட காலப்பகுதியில் திருச்சொரூபங்கள் கறுப்புத் துணியினால் மூடப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கின்றேன். பிறகு பல ஆண்டுகளாக அச்செயற்பாட்டை காணவில்லை. ஆனால் மீண்டும் அப்பழக்கம் அண்மைக் காலங்களில் பல ஆலயங்களில் நடைமுறைக்கு திரும்பி உள்ளது. ஆனால் இப்போது ஊதா நிறத் துணி பயன்படுத்தப்படுகிறது. இதன் அர்த்தம் என்ன என்பதை புரிந்து கொள்ள முனைவோம்.

தொடக்க திருச்சபையில் பாஸ்கா விழாவிற்கான ஆயத்தங்களின் போது, பொது பாவிகள் எனக் கருதப்படும் விபச்சாரத்தில் ஈடுபட்டோர், கொலையாளி மற்றும் வேற்று தெய்வங்களை வழிபட்டோர் சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டார்கள். அவர்கள் கடுமையான தவம் செய்யவேண்டும். பெரிய வியாழன் அன்று ஒப்புரவை மேற்கொண்டு மீண்டும் கிறிஸ்தவ சமூகத்தோடு ஒன்றிணைவார்கள்.

திருநீற்றுப் புதனன்று எல்லார் மீதும் சாம்பல் பூசும் நடைமுறை வழக்கத்திற்கு வர முன்னைய பழக்கம் அற்றுப்போய்விட்டது. மேற்கூறிய செயற்பாடுகள் தவக்காலம் என்பதை நினைவுபடுத்தியது. முன்னைய பழக்கம் அற்றுப்போகவே நாளடைவில் பாமர மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் தவக்கால ஆரம்பத்தின் அடையாளமாக பீடத்தின் முன்னால் அதனை மறைக்கும் வண்ணமாக பெரிய திரைச்சீலை தொங்கவிடப்பட்டது. மேலும் பாவிகளின் கண்களிலிருந்து புனிதமான திருப்பீட சந்நிதானம் மறைக்கப்பட வேண்டும். அவர்களின் ஒப்புரவின் பின்னரே அத்திரைச்சீலை நீக்கப்பட்டது. இப்பழக்கம் ஜேர்மனியில் ஒன்பதாம் நூற்றாண்டில் ஆரம்பமாகியதாக வரலாறு சொல்கிறது. இன்னும் புனித மாற்குவின் நற்செய்தியின் படி "அப்பொழுது திருக்கோவிலின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழந்தது" (15:38) பழைய ஏற்பாட்டு காலத்தில் தூயகத்தில் திரைச்சீலை தொங்கியது. இதனுள் எவரும் செல்ல இயலாது. தலைமைக்குரு மாத்திரம் தான் செல்லலாம். அதுவும் வருடத்திற்கு ஒருமுறை பாவப்பரிகார தினத்தன்று மாத்திரமே. கிறிஸ்துவின் மரணத்தின்போது திரைச்சீலை கிழித்தது என்பதன் பொருள் இறைவனை அண்டிச் செல்லும் வழி திறக்கப்பட்டுள்ளது. யாவரும் இறைவனிடம் செல்லமுடியும். அதற்கான வழியை கிறிஸ்து தனது மரணம் வழியாக திறந்து வைத்துள்ளார். இதனை அடையாளப்படுத்தும் வகையில் பாவிகளின் கண்களில் இருந்து மறைக்கப்படும் பரிசுத்த சந்நிதானத்தை மறைக்க பயன்படுத்தப்படும் திரைச்சீலை புனிதவாரம் புதன்கிழமை (பழைய வழிபாட்டு முறையில்) மேற்கூறிய நற்செய்தி வாசிப்பை தொடர்ந்து நீக்கப்படுகிறது. மேலும் 19ம் நூற்றாண்டைச் சேர்ந்த பெனதிக்து சபை துறவியான பொரஸ்பர் கிறேஞ்சர் என்பவர் இதற்கு இன்னுமொரு விளக்கம் கொடுக்கிறார். அவர் இரண்டு திருவிவிலியப் பகுதிகளை மேற்கோள் காட்டுகின்றார்.

"அவரைக் கண்ட பலர் திகைப்புற்றனர். அவரது தோற்றம் பெரிது உருக்குலைந்ததால் மனித சாயலே அவருக்கு இல்லாதிருந்தது. மானிடரின் உருவமே அவருக்கு இல்லை" (எசா 52:14)

"நானோ ஒரு புழு, மனிதனில்லை, மானிடரின் நிந்தைக்கு ஆளானேன், மக்களின் இகழ்ச்சிக்கு உள்ளானேன்" (தி.பா 22:6)

மேற்கூறிய திருவிவிலியப் பகுதிகள் இயேசுவின் மனித்தன்மை உருக்குலைக்கப்படுவதை காண்கிறோம். தெய்வீக, மனித தன்மைகள் எங்கள் கண்களுக்கு மறைக்கப்படுகிறது என்பதின் அடையாளம் இத்திரைச்சீலை.

ஆனால் இன்று இத்திரைச் சீலைக்குப் பதிலாக திருச்சிலுவையும், திருச்சுரூபங்களும் மூடப்படுகின்றன. வழமையாக தவக்காலத்தின் 5ம் வாரம் இது இடம்பெறும். 5ம் வாரம் பாடுகளின் வாரம். 6ம் வாரம் பரிசுத்த வாரம். தவக்காலத்தின் இந்த இறுதி இரண்டு வாரங்களும் ஏனைய நாட்களை விட சிறப்பானவை. எம்மை பாஸ்கா பெருவிழாவிற்கு ஆயத்தம் செய்யும் சிறப்பு இறுதி நாட்கள் என்பதை நினைவுபடுத்துவதன் அடையாளம். இயேசுவினுடைய பாடுகளை தியானிக்க, அதனோடு ஒன்றித்திருக்க ஒரு வகையான நோன்பு. ஆம் பார்வைக்கு நோன்பு, எங்கள் பார்வையை சிதறவிடாமல், இயேசுவின் பாடுகளில் பதிக்க அழைப்பு தருகிறது. திருச்சிலுவை பாதையின் நிலைகள் மாத்திரம் மூடப்படுவதில்லை. பெரிய வெள்ளியன்று மூடப்பட்ட திருச்சிலுவை வழிபாட்டின்போது திறக்கப்படுகிறது. மூடப்பட்ட ஏனைய திருச்சொரூபங்கள் வசதியான நேரத்தில் துணி அகற்றப்படுகிறது.

இறுதியாக எமது இவ்வுலக வாழ்வும் திரையிடப்பட்ட வாழ்வு போன்றது. புனித பவுல் கூறுவதுபோல நாம் உண்மை வீட்டில் இருந்து வெகு தொலைவில் இருக்கிறோம். எமது மரணம் இத்திரையை அகற்றும். ஆகவே நாம் இவ்வுலகில் வாழும் காலத்தில் எம்மிடையே உள்ள மனித, தெய்வ சாயலை இழக்கமால் பேணிக் காக்கும் வகையில் வாழ தவக்காலம் துணை செய்யட்டும்.

வாசகர்களே தவக்காலத்தின் இறுதி இரண்டு கிழமைகளிலாவது தொலைக்காட்சி பார்ப்பதை குறைப்போம். திறன் கையடக்க தொலைபேசி (smartphone) பயன்பாட்டை குறைப்போம். இணையத்தில் செலவழிக்கும் நேரத்தை குறைப்போம். கம்பியூட்டரில் செலவிடும் நேரத்தை குறைப்போம். இவை மட்டில் எம் பார்வைக்கு நோன்பு கொடுப்போம். இது ஆன்மீக வாழ்வுக்கு மாத்திரமல்ல, உடல் நலத்திற்கும் நன்மை பயக்கும் உணவிலிருந்து நோன்பிருப்பது போல பார்வையிலும் நோன்பிருப்போம்.

# திருத்தந்தை பிரான்சிஸ் தலைமைப் பணியில் ஆறு ஆண்டுகள்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கத்தோலிக்கத் திருஅவையின் தலைமைப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறாம் ஆண்டு, பங்குனி 13, புதனன்று நிறைவடைந்தது, கத்தோலிக்கர், திருத்தந்தைக்காக சிறப்பான செபங்களை, மேற்கொண்டனர்.

இந்த ஆறு ஆண்டுகளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமைப் பணி பற்றி, திருஅவையில் ஊடகத்துறைப் பொறுப்பாளர்கள் சிலர் தங்களின் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர்.

குடும்பம், இளையோர் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றங்கள் உட்பட, மூன்று உலக ஆயர்கள் மாமன்றங்களையும், திருஅவையில் சிறியோர் பாதுகாப்பு என்ற தலைப்பில் ஒரு மாமன்றத்தையும் திருத்தந்தை நடத்தியுள்ளார். மேலும், வருகிற அக்டோபரில் நடைபெறவிருக்கும் அமேசான் பகுதிக்கென, ஆயர்கள் மாமன்றத் தயாரிப்பும் திருஅவையில் இடம்பெற்று வருகின்றது.

திருஅவையின் வாழ்வின் மையத்தில் எல்லாரும் ஒன்றிணைந்து வருவதன் முக்கியத்துவம், திருத்தந்தையின் தலைமைப்பணியில் தெளிவாகத் தெரிகின்றது என்றும், இது, பலன்களை விரைவாகத் தந்துள்ளது என்றும், ஊடகத்துறைப் பொறுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**திருத்தூதுப் பயணங்கள்**


திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த ஆறு ஆண்டுகளில் உலகின் நாற்பது நாடுகளில், 27 திருத்தூதுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார், இவ்வாண்டு மாசி 3, 4 ஆகிய நாள்களில் அபுதாபிக்கு மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தூதுப் பயணத்தில், 4ம் திகதியன்று, எகிப்தின் பெரிய முஸ்லிம் தலைமைக் குரு Al-Azhar அவர்களுடன் இணைந்து, மனித உடன்பிறந்த நிலை பற்றிய வரலாற்று சிறப்புமிக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

மேலும், இந்த பங்குனி 30, 31 ஆகிய திகதிகளில், மொராக்கோ, வருகிற வைகாசி 5 முதல் 7 வரை, பல்கேரியா, வட மாசிடோனியா, என இந்த ஆண்டில் மேலும் திருத்தூதுப் பயணங்களை மேற்கொள்ளவிருக்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நம் பொதுவான இல்லமாகிய இப்பூமியை பாதுகாத்தலை வலியுறுத்தும் திருத்தந்தை வெளியிட்ட Laudato Si திருமடல், இக்கால காலநிலை பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

புவனோஸ் அய்ரெஸ் பேராயராகப் பணியாற்றிய கர்தினால் Jorge Mario Bergoglio அவர்கள், 2013ம் ஆண்டு பங்குனி 13ம் திகதி, திருஅவையின் 266வது திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், திருத்தந்தை பிரான்சிஸ் என்ற பெயரையும் ஏற்றார். இவர், 1936ம் ஆண்டு மார்கழி 17ம் திகதி, அர்ஜென்டினா நாட்டின் புவனோஸ் அய்ரெஸ் நகரில் பிறந்தார்.

# விசுவாசத்திற்காக உயிரைக் கொடுப்பது ஒரு கொடை




இஸ்பெயின் நாட்டின் உள்நாட்டுப் போரில் விசுவாசத்திற்காக கொல்லப்பட்ட இறைஊழியர்களான ஒன்பது குருத்துவ மாணவர்களை, பங்குனி 09, சனிக்கிழமை முற்பகலில், அந்நாட்டின் Oviedo நகர் பேராலயத்தில் அருளாளர்கள் என அறிவித்த கர்தினால் பெச்சு அவர்கள், இவ்வாறு கூறினார்.

Oviedo பேராலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் மறையுரையாற்றிய கர்தினால் பெச்சு அவர்கள், இந்த மறைசாட்சிகள் போன்று, இன்றைய திருஅவைக்குத் தாராளமனதுடன் பணியாற்றும், குருத்துவ மாணவர்கள், அருள்பணியாளர்கள், அர்ப்பணிக்கப்பட்ட துறவியர் மற்றும் மறைப்பணியாளர்கள் தேவைப்படுகின்றனர் என்று கூறினார். விசுவாசத்திற்காக உயிரைக் கொடுப்பது ஒரு கொடை, இது சிலருக்கே நேரிடுகின்றது, ஆனால், விசுவாசத்தை வாழ்வது அனைவருக்கும் விடுக்கப்படும் அழைப்பு என்பதை, இந்த இளம் மறைசாட்சிகள், நம் அனைவருக்கும் கூறுகின்றனர் என்றார், கர்தினால் பெச்சு.

சாதாரண கிறிஸ்தவ குடும்பங்கள் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த இந்த மறைசாட்சிகள், இரவின் இருளில் சுடர்விட்டவர்கள், விசுவாசிகளின் பாதையில் அவர்கள் தொடர்ந்து சுடர்விட்டுக்கொண்டிருக்கின்றனர் என்றும் கர்தினால் மறையுரையாற்றினார்.

**ஒன்பது இளம் அருளாளர்கள்**

இஸ்பெயினின் Asturias பகுதியைச் சார்ந்த, Angelo, Mariano, Jesus, César Gonzalo, José Maria, Juan José, Manuel, Sixto, Luis ஆகிய ஒன்பது குருத்துவ மாணவர்களும், 1936ம் ஆண்டுக்கும், 1937ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், அந்நாட்டின் உள்நாட்டுப் போரின்போது விசுவாசத்திற்காகக் கொல்லப்பட்டார்கள். 1934ம் ஆண்டு கோடை விடுமுறையை தனது குடும்பத்துடன் செலவழித்து, Oviedo குருத்துவ கல்லூரிக்குத் திரும்பிய Angel Cuartas Cristóbal, நாட்டில் நிலைமை மோசமாக இருப்பதை உணர்ந்தும், வீடு திரும்ப மனமில்லாமல், அங்கேயே தங்கி மறைசாட்சியானார். இந்த ஒன்பது மறைசாட்சிகளில் மிகவும் இளையவரான Angel Cuartas Cristóbal அவர்களின் வயது 18. இந்த மறைசாட்சிகள், 18க்கும் 24 வயதுக்கும் உட்பட்டவர்கள்.

# ஆண்டவரின் அழைப்புக்குப் பதிலளிப்பதில் துணிவு காட்டுங்கள்



கடவுளின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைப்பதற்கும், அவர் அமைத்துள்ள பாதையில் பின்செல்வதற்கும், மனத்துணிவும், வீரமும் தேவைப்படுகின்றது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறையழைத்தல்களுக்காகச் செபிக்கும் உலக நாள் செய்தியில் தெரிவித்துள்ளார். "கடவுளின் வாக்குறுதிகளுக்காக, சவால்களையும் எதிர்கொள்வதற்கு துணிவு கொள்ளுங்கள்" என்ற தலைப்பில், வருகிற வைகாசி 12ம் திகதி சிறப்பிக்கப்படும், 56வது இறையழைத்தல் உலக நாளுக்கென, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதியுள்ள செய்தி, பங்குனி 09, சனிக்கிழமையன்று வெளியிடப்பட்டது. வாக்குறுதி, சவால் ஆகிய இரு சொற்களை மையப்படுத்தி இச்செய்தியை வழங்கியுள்ள திருத்தந்தை, ஆண்டவரின் அழைப்புக்கு காதுகேளாதவர்போல் இருக்காதீர்கள், மாறாக, அவர் அழைத்தால், அவர்மீது நம்பிக்கை வைத்து பின்செல்லுங்கள் என்று கூறியுள்ளார்.

பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகிய இரு உடன்பிறப்புகளை, தம் சீடர்களாக இயேசு அழைத்தது பற்றிச் சொல்லும் மாற்கு நற்செய்திப் பகுதியை (மாற்.1,16-20) மையப்படுத்தி தன் சிந்தனைகளை வழங்கியுள்ள திருத்தந்தை, ஆண்டவரின் அழைப்புக்குப் பதிலளிப்பது என்பது, பெரிய சவால்களைச் சந்திப்பதற்கு நம்மையே கையளிப்பதாகும் என்றும், நம் சிறிய படகோடு நம்மைக் கட்டியிருப்பவற்றையும், அறுதியான தெரிவு செய்வதலிருந்து நம்மைத் தடைசெய்பவற்றையும், பின்னுக்குத் தள்ளுவதற்குத் தயாராக இருப்பதாகும் என்றும் கூறியுள்ளார்.

ஒவ்வோர் அழைப்பும், வலைகளைக் கைகளில் வைத்துக்கொண்டு, கரையில் நிற்பதல்ல, மாறாக, இயேசு நமக்கென குறித்து வைத்துள்ள பாதையில் பின்செல்வதாகும் என்று கூறியுள்ள திருத்தந்தை, ஒருவரின் இறையழைப்பு, தனக்காக அல்ல, அது தனது சமுதாயம் மற்றும் கலாச்சாரங்களுக்குப் பணியாற்ற வேண்டியதாகும் என உரைத்துள்ளார்.

ஆண்டவரின் அழைப்பு, நம் சுதந்திரத்தில் அவர் தலையிடுவதாக இல்லை, மேலும், இந்த அழைப்பு நம்மை ஒரு கூண்டுக்குள் வைப்பதோ அல்லது சுமையானதோ அல்ல, மாறாக, இது, கடவுள் நம்மைச் சந்திப்பதற்கு...

தொடர்ச்சி 15ம் பக்கம்..







## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

"இவ்வுலகப் பொருள்களின் மீதுள்ள பற்றுகளைப் புறம்தள்ளி, கடவுளை நோக்கிப் பயணத்தைத் தொடர்கின்றவர்கள் மட்டுமே, அவர் பற்றிய பேருண்மையைக் கண்டுகொள்வார்கள்"

"பெண்கள் உலகை மேலும் அழகுறச்செய்கின்றனர், அவர்கள் அதைப் பாதுகாத்து, உயிர்த்துடிப்புள்ளதாக்கி வருகின்றனர், புதுப்பித்தலின் அருளைக் கொணர்கின்றனர், எல்லாரையும் இணைத்துக்கொள்கின்றனர் மற்றும், தங்களையே வழங்குவதற்குத் துணிவு கொண்டுள்ளனர்"

"தவக்காலப் பயணம் இன்று தொடங்குகிறது. தன் இருகரம் விரித்து காத்திருக்கும் தந்தையிடம் திரும்பிவரும் வண்ணம், மனமாற்றத்துடனும், தவ முயற்சிகளுடனும் இக்காலத்தை வாழ, உங்களை அழைக்கிறேன்"

"மனிதனின் பேராசையால் ஆயிரம் வழிகளில் காயமடைந்திருக்கும் இவ்வுலகின் அழுகுரலுக்கு நாம் செவிமடுப்போம். எவரையும் புறந்தள்ளாமல், அனைவரையும் வரவேற்கும் ஓர் இல்லமாக இவ்வுலகம் இருந்திட நாம் அனுமதிப்போம்"

"நாம் ஆற்றும் அனைத்துச் செயல்களிலும் நிலையான தன்மையையும், உயிர்த்துடிப்பையும் வழங்குவது செபம்"

"நன்றாகச் செபிப்பதற்கு, குழந்தையின் இதயம் நமக்குத் தேவைப்படுகின்றது"



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்

(மத் 6:9)

பகுதி – 15

## உடலால் வேண்டுவோம்

உடல் என்பது நாம் இறைவனிடம் வேண்டுவதற்கான வலிமையான ஓர் ஆயுதம். எனவே, நம் உடலை இறைவேண்டலுக்காக நன்கு பயன்படுத்துவோம். திருவிவிலியம் காட்டும் பாதையில் உடலால் நாம் மூன்று விதங்களில் இறைவேண்டல் செய்யலாம்.

**1. உடல் சைகைகளால் வேண்டுதல்.**

உடல் சைகைகளால் இறைவேண்டலில் ஈடுபடும் பல காட்சிகளை விவிலியத்தில் காண்கிறோம். கைகளை உயர்த்தியும், விரித்தும், கூப்பியும் இறைவனை வேண்டலாம். இதோ, சில எடுத்துக்காட்டுக்கள். தூயகத்தை நோக்கிக் கைகளை உயர்த்தி ஆண்டவரைப் போற்றுங்கள் (தி.பா 134:2) மாலைப் பலிபோல் என் கைகள் உமைநோக்கி உயர்வனவாக (தி.பா 141:2) ஆண்கள் சினமும் சொற்பூசலும் இன்றி எவ்விடத்திலும் தூய உள்ளத்தோடு கைகளை உயர்த்தி இறைவேண்டல் செய்யுமாறு விரும்புகின்றேன் (தி.மொ 2:8) என்பது பவுலடியாரின் விருப்பம்.

சாலமோன் வானத்திற்கு நேரே தம் கைகளை உயர்த்தி மன்றாடிய அருமையான வேண்டுதலை அரசர்கள் முதல் நூலில் (1அர 8:22) வாசிக்கின்றோம். தோபித்து நூலில் வரும் இளம்பெண் சாரா பலகணியை நோக்கிக் கைகளை விரித்து மன்றாடினாள் (தோபி 3:11). திருப்பாடல்களின் ஆசிரியர் கைகூப்பி உமது பெயரை ஏத்துவேன் (தி.பா 63:4) என்கிறார்.

கால்களைத் தெண்டனிட்டும், பணிந்தும், முழந்தாள்படியிட்டும் வேண்டுவது இன்னொரு செபமுறை, உம் திருக்கோவிலை நோக்கித் திரும்பி உம்மைத் தாள்பணிவேன் (தி.பா 138:2) என்றும், வாருங்கள் தாள்பணிந்து அவரைத் தொழுவோம். நம்மை உருவாக்கிய ஆண்டவர் முன் முழந்தாளிடுவோம் (தி.பா 95:6) “நம் கடவுளாகிய ஆண்டவரைப் பெருமைப்படுத்துங்கள். அவரது அரியணைமுன் தாள்பணிந்து வணங்குங்கள்” (தி.பா 99:5) என்றும் பாடுகிறார் திருப்பாடல் ஆசிரியர். தானியேல் தமது வழக்கப்படி நாள்தோறும் மூன்று வேளையும் கடவுளுக்கு முன்பாக முழந்தாளிலிருந்து மன்றாடி நன்றி செலுத்துவார் (தானி 6:10) என்று தானியேல் நூலில் வாசிக்கிறோம்.

கை தட்டுவது, நடனம் செய்வது போன்ற உடல் சைகை வழிபாட்டு முறைகளையும் விவிலியத்தில் காண்கிறோம். நடனம் செய்து அவரது பெயரைப் போற்றுவார்களாக (தி.பா 149:3) என்கிறார் திருப்பாடல் ஆசிரியர். தாவீது உடன்படிக்கைப் பேழையின் முன் நடனம் ஆடியதை (2 சாமு 6:16) நாம் அறிவோம். களிப்புடன் கைகொட்டுங்கள். ஆர்ப்பரித்துக் கடவுளைப் புகழ்ந்து பாடுங்கள் (தி.பா 47:1) என்னும் திருப்பாடலின் படி கைகொட்டுவது, கை தட்டுவதும்கூட இறைவேண்டலின் கூறுகளே.

மார்பில் அறைவதை மன வருத்தத்தின் ஓர் அடையாளமாகப் பார்க்கிறோம். வரிதண்டுபவர் தொலைவில் நின்றுகொண்டு வானத்தை அண்ணாந்து பார்க்கக்கூடத் துணியாமல் தம் மார்பில் அடித்துக்கொண்டு, கடவுளே பாவியாகிய என்மீது இரங்கியருளும் (லூக் 18:13) என்றார்.

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்கள் எப்படி உடலைப் பயன்படுத்தி நாம் இறைவனிடம் வேண்டலாம் என எடுத்துரைக்கின்றன. ஆனால், இது எளிய இயல்பான ஒரு முறையே. இதனைவிட மேலான உடல் வழி வேண்டுதல் இரண்டு இருக்கின்றன.

**2. உடலை ஒறுத்து வேண்டுதல் :**

நமது உடலில் நாம் சந்திக்கின்ற துன்பங்களை இறைவனுக்கு நாம் ஒப்புக்கொடுக்கின்றபொழுது, அது மேலான செபமாக, வழிபாடாக மாறுகிறது. இயேசு தம்முடைய பாடுகளை நமது பாவங்களுக்காகத் தந்தை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தார். நமக்கு மீட்பைப் பெற்றுத் தந்தார்.

தமது உடலால் தந்தை இறைவனின் திருவுளத்தை இயேசு நிறைவேற்றினார் என்பதை எபிரேயர் திருமடல் அழகாகச் சொல்கிறது. கிறிஸ்து உலகிற்கு வந்தபோது பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. ஆனால், ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர். எனவே, உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன் என்றார் (எபி 10:5-9) இந்தத் திருவுளத்தால்தான் இயேசுக்கிறிஸ்து ஒரே ஒருமுறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதுதன் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கிறோம் (எபி 10:10).

இயேசுவைப் பின்பற்றி பவுலடியாரும் தமது உடலில் சந்தித்த துன்பங்கள் அனைத்தையும் இறைவனுக்காக, திருச்சபைக்காக ஒப்புக்கொடுத்தார். இப்பொழுது உங்கள் பொருட்டுத் துன்புறுவதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். கிறிஸ்து தம் உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார். அவர் மேலும் படவேண்டிய வேதனையை என் உடலில் ஏற்று நிறைவு செய்கிறேன் (கொலோ 1:24) என்று உருக்கமாகக் குறிப்பிடுகிறார்.

மேலும், இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்கு சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்லுகிறோம் (2 கொரி 4:10) என்கிறார். இந்த மரபில் ஏராளமான புனிதர்கள் தங்கள் உடலில் வேதனைகளை, நோய்களை திருச்சபையின் மீட்புக்காக ஒப்புக்கொடுத்தனர். புனித குழந்தை தெரசாள், புனித தமியான் என ஒரு திருக்கூட்டமே இந்தக் குழாயில் உள்ளது.

**3. உடலைக் கையளித்து வழிபடுதல்:**

நமது உடலை உயிருள்ள பலியாக இறைவனுக்கு ஒப்புக்கொடுப்பது மிகச் சிறந்த வழிபாடாகும். கடவுள் உங்களை விலைகொடுத்து மீட்டுள்ளார். எனவே, உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள் (1 கொரி 6:20) என்று அழைக்கிறார் பவுலடியார். இன்றும் என்றும், வாழ்விலும் சாவிலும் முழுத் துணிவுடன் கிறிஸ்துவை என் உடலால் பெருமைப்படுத்துவேன். இதுவே என் பேராவல். இதுவே என் எதிர்நோக்கு (பிலி 1:20) என்று பெருமிதத்துடன் அவரே அறிக்கையிட்டார். நம் வாழ்வு முழுவதும் நமது உடலால் இறைவனைப் பெருமைப்படுத்துவதே உடலால் செய்யும் மிகச் சிறந்த வழிபாடு.

இயேசு தமது உடலை நமக்காகக் கையளித்தார். தமது உடலை நமக்கு உணவாகத் தந்தார். கடைசி இரா உணவின்போது அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளைப் போற்றி, அதைப் பிட்டுச் சீடருக்குக் கொடுத்து, இதைப் பெற்று உண்ணுங்கள். இது எனது உடல் என்றார் (மத் 26:26). இயேசுவின் உடல் நம்மை வாழ்விக்கின்றது. இறைவனைப் பெருமைப்படுத்துகின்றது.

நமது உடல் தூய ஆவியாரின் கோவில், எனவே, உடல் தூய்மை காத்து தூய ஆவியைப் பெருமைப்படுத்த வேண்டும். உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? (1 கொரி 6:19). “எனவே, பரத்தமையை விட்டு விலகுங்கள். மனிதர் செய்யும் எப்பாவமும் உடலுக்குப் புறம்பானது. ஆனால். பரத்தமையில் ஈடுபடுவோர் தம் சொந்த உடலுக்கெதிராகவே பாவம் செய்கின்றனர்” (1 கொரி 6:18).

அத்தோடு, பெருந்தீனி ஆர்வத்தாலும் நமது உடலை நாம் மாசுபடுத்தக்கூடாது. வயிற்றுக்கென்றே உணவு, உணவுக்கென்றே வயிறு, இவை இரண்டையுமே கடவுள் அழித்துவிடுவார். உடல் ஆண்டவருக்கே உரியது. ஆண்டவரும் உடலுக்கே உரியவர் (1 கொரி 6:13). மேலும், கிறிஸ்தவர்கள் அனைவரும் சாதி, இன, நிற பேதமின்றி ஒன்றித்து வாழும்போது இறைவன் பெருமை அடைகிறார். நீங்கள் கிறிஸ்துவின் உடல். ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புகள் (1 கொரி 12:27) என்பதை நினைவில் கொள்வோம்.

நாம் உடலிலும், உள்ளத்திலும் மாசு எதுவுமின்றி நம்மையே தூய்மைப்படுத்துவோம். கடவுளுக்கு அஞ்சித் தூய வாழ்வில் நிறைவடைவோம். (2 கொரி 7:1) என்னும் அறிவுரையின்படி வாழ்வதே நன்று. உடல், உள்ளம், ஆன்மா மூன்றிலும் நாம் இறைவனுக்கேற்றவர்களாக வாழ்வதே சிறந்த இறைவேண்டல்.

தொடரும்

## இழப்பே!

### இயேசுவின் சீடர்களுக்கு அழகு

நாம் நம் வாழ்வில் எதை இழக்க முன்வருவேண்டும்.

**1. நேரம் :**

இன்று எல்லோரும் சொல்லும் ஒரு காரணம், “நேரமில்லை” என்பது ஆனால், வாழ்வு என்னும் கொடையைத் தந்த இறைவனுக்கே நேரமில்லை என்றால் என்ன பொருள்? எனவே கடவுளுக்காக நம் நேரத்தை இழக்க முன்வருவோம்.

**2. பொழுதுபோக்கு :**


இன்றைய நாள்களில் மனிதர்களுடன் நேரம் செலவழிப்பதைவிட, தொலைக்காட்சி, அலைபேசி, இணையதளம், இவற்றோடுதான் அதிக நேரம் செலவிடப்படுகின்றது. இறைவனுக்காகவும், மனிதர்களுக்காகவும், நேரம் செலவழிக்க பொழுதுபோக்குகளில் செலவிடும் நேரங்களை இழக்க முன்வருவோம்.

**3. பணமும் பொருளும் :**

“சேகரித்தலே வாழ்வு” என்னும் நுகர்வு கலாச்சாரத்தில் வாழும் நாம், பிறருக்காக நம் பணத்தையும், பொருள்களையும், இழக்க முன்வருவோம்.

**இழத்தல் இல்லாமல் சீடத்துவம் இல்லை என்பதை உணர்ந்து எவற்றையெல்லாம் இழக்கலாம் என எண்ணிப் பார்ப்போம். இழத்தலின் வழியாக இறையாட்சிக்குள் நுழைவோம் இத்தவக்காலத்தில்**

# எமது சந்ததியை சீரழிக்கும் போதை



போதைப் பொருள் என்ற கொடிய மிருகம் இன்று எமது பிரதேசத்தில் மாத்திரமல்ல, முழு உலகத்திலும் பரவி மனித சமூகத்தை அழிக்கும் மிருகமாக மாறியுள்ளது.

நம்மில் அநேகர் பலவிதமான போதைகளுக்கு அடிமையாகி இருக்கிறோம். பணம்,பெயர், புகழ், அதிகாரம், காமம் எனத் தொடங்கி உடல் ரீதியாகப் பாவிக்கப்படும் போதைவஸ்துக்களுக்கும் அடிமைகளாக வாழ்கிறோம்.

ஆரம்பத்தில் அபின், மூக்குப்பொடி, வெற்றிலைப் பாக்கு, பீடி, சிகரட், கஞ்சா, சாராயம் என ஊடுருவிய போதைகளை தடுக்க முடியாமல் தடுமாறி நிற்கின்றோம். மத ரீதியாக போதைப்பொருள் பாவனையைத் தடுக்கப்பட வேண்டிய, பாவத்தின் சுமையாக கருதும் ஒன்றாக விளங்கியது. சமூகத்தில் இப்பாவனை நாகரீகமாகவும் கௌரவம் கொடுக்கக் கூடியது என எண்ணி வீதியோரங்களில் நின்றுக்கொண்டு எந்த விதமான மன சஞ்சலமோ, குற்ற உணர்வோ, இரக்கமோ இன்றி மனித சீர்கேட்டில் ஈடுபடும் நிலை சாதாரணமாக நிகழ்ந்துக்கொண்டிருக்கிறது.

எமது சமூகம்; வீடுகளிலும் பாடசாலைகளிலும், பொதுஇடங்களிலும் பீடி, சிகரட், வெற்றிலை, சாராயம்,



மூக்குப்பொடி என ஆரம்பித்தது மாத்திரமின்றி, சினிமாவிலும் இப்பாவனையின் தார்மீகவழியாகப் பெற்றுக்கொண்டதும் உண்மையாகும். இன்றைய சினிமாவைப் பார்த்தால் சமூக சீரக்கல், இளையத்தலைமுறையினரை சரியான பாதையில் வாழ விழிப்புணர்வு ஊட்டுதல் போன்ற தகவல்களுக்கு பதிலாக வயது வித்தியாசமின்றி, ஆண் - பெண் வேறுபாடின்றி போதைப்வஸ்துக்களுக்கு அடிமையாகும் வழிகளைக் காட்டுகின்றனர். இவ்வாறான திரைப்படங்களைக் காட்டுவதன் மூலம் எமது தலைமுறையினரின் சிந்தனைகள் சீரழிப்பதற்கான இலஞ்சம் வழங்கப்படுகிறது போலும்.

போதை வஸ்துக்கள் மாத்திரையாக மாற்றமடைந்த பொழுதும் வேடிக்கையாகவே பார்த்துக்கொண்டு இருந்தோம். இது ஒரு தகவல் என்ற அடிப்படையில் ஊடகங்கள் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன. எமது வீட்டில் இப்பாவனைக்கு அடிமையானவர்களைக் கூட கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறி தவித்தோம்.

பொருளாதாரம், உடல் சம்பந்தமான இழப்புக்களைத் தாண்டி எமது வீடு, சமூகம், நாடு, உலகம் நிலைத்தடுமாறி நல்லொழுக்கச் சீர்கேட்டில் சிக்கிக்கொண்டது மாத்திரமன்றி எமது சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர் - யுவதிகள், பெரியோர் எனப் பலரை இக்கொடூர வைரஸ் தொற்றி ஊடுருவி நல்வாழ்க்கை முறையைக் குழித்தோண்டிபுதைத்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையையும் செய்வதறியாது வாயடைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

போதை வஸ்துக்கள் மருந்துகள் மாத்திரைகளாக உருமாறி வியாபாரமாக ஆரம்பித்து இன்று இனம் தெரியாத கயவர்கள் எம்மவர்களை நீண்ட நேர போதைவஸ்து பாவனையில் திளைக்க வைத்து அவர்களின் உயிரை பணயம் வைத்து பணம் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மூளையை செயலிழக்க வைக்கும் இம்மாத்திரைகளை உட்கொண்டு பெற்றோர் பெரியோரை மதிக்காமல் சமூகத்தையும் அதன் விழுமியங்களையும் மதிக்காமல் அடுத்தவர்களின் உடமை, உணர்வு, உயிர் என்பவற்றை துளியும் நினைக்காமல் விபத்து, விபச்சாரம், கொள்ளை, கொலைகளில் ஈடுபடும் அளவுக்கு அட்டூழியங்கள் மிதமிஞ்சிவிட்டது.

### போதைப் பொருட்கள் இரண்டு வகைப்படும்.

1. போதைவஸ்து பாவனையின் மூலம் தனி நபர் பாதிக்கப்படுதல்
2. போதைவஸ்து பாவனையின் மூலம் முழுச்சமூகமும் பாதிக்கப்படுதல்

### போதைவஸ்து பாவனையின் மூலம் தனி நபர் பாதிக்கப்படுதல்:

நம் தேசத்தில் தொன்று தொட்டு காணப்படும் கலாச்சார நிகழ்வுகளின் போது மாத்திரம் பாவிப்பது போதைவஸ்துக்கு அடிமையாதல் அல்ல. அதையே நாளாந்தம், எந்நேரமும் பாவித்து விடமுடியாமல் தொடர்ந்து பாவித்துக்கொண்டிருப்பவர்கள் போதைவஸ்துவுக்கு அடிமையானவர்களாகும். இது சமூகத்தை சாராத தனி நபர்களைப் பாதிக்கும் தனக்குத் தானே அழிவை தேடிக்கொள்ளும் போதைவஸ்து பாவனையாகும்.

### போதைவஸ்து பாவனையின் மூலம் முழுச்சமூகமும் பாதிக்கப்படுல்:

முழு சமூகத்தையும் அச்சத்திற்குத் தள்ளும் விதத்தில் சாராயம், கஞ்சா, டொனிக் எனத் தொடங்கி மாத்திரைப் பிரியர்களாக மாறி முடங்கிப் போயிருக்கும் சமூகமாகும். இவர்கள் பேராபத்துக்குள் சிக்கி வெளியில் வரமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் எதிர்கால பரம்பரையினர் நோய்வாய்ப்பட்டவர்களாக திக்கற்றவர்களாக மாற வழியமைத்துக் கொடுக்கின்றனர். இவ்வாறானவர்களை இனம் கண்டு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி காப்பாற்ற வேண்டும்.

எமது நாட்டில் போதைவஸ்து தாராளமாக தடைபுரண்டோடக காரணமாக இருப்பவர்கள் அமைச்சர்கள், அரச அதிகாரிகள், பெரும் வியாபாரப் புள்ளிகளுமேயாகும். இவர்கள் தங்களுக்கென்று இடத்துக்கு இடம் சிறிய ஏழை வியாபாரிகளை நியமித்து, பாடசாலைகள், கல்லூரிகள், தொழிலகங்கள், நிறுவனங்கள் போன்ற எல்லா இடங்களிலும் உள்ளவர்களுக்கு இப்பாவனையை பழக்கி அதை விற்பனைசெய்து அவர்களின் சமாதியில் உல்லாசமாக சல்லாபித்துக் கொண்டு தம்மைவிட புத்திசாலிகள் இல்லை என நினைத்து பிணம் தின்னி கழுகுகளாக களியாட்டங்கொள்கின்றனர்.

காவல்துறையைச் சேர்ந்தோரும் சரி, போதைவஸ்துக்களை அழிக்கவென புறப்படுவோரும் சரி, ஏழை சிறிய வியாபாரிகளைப் பிடிப்பதிலும், சிறிய பாவனையாளர்களைப் பிடிப்பதிலும் ஆர்வம் கொண்டு, தமது காலம் நேரம், சக்தி, தமது அதிகாரங்களைப் பயன்படுத்தியும், தம்மைப் புகழ்ந்து ஊடகங்களில் அறிக்கை வெளியிட்டும் வருவதில் போலி சாதனையாளர்களாக திகழ்கிறார்கள்.

போதைவஸ்து பாவிப்பவர்களையோ, சிறிய ஏழை வியாபாரிகளையோ அல்ல, மாறாக எமது நாட்டில் போதைவஸ்து கொண்டு வரும் வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பவர்களை அழிக்க வேண்டும். அதைவிடுத்து போதைவஸ்து பாவனையாளர்களான மாணவர்கள், இளைஞர்கள் - யுவதிகள், சிறுவர்கள், பெரியோர் என இவர்களைப் பிடித்து பெரிதாக TV, வானொலி, பத்திரிகைகள், Facebook , Whatsup பிலும் அலசி சாடுவதில் எந்தவித அர்த்தமோ பலனோ இல்லை.

போதைவஸ்தை எமது வீட்டிலிருந்து சமூகத்திலிருந்து, நாட்டிலிருந்து அகற்றி தூய்மையாக்க உள்ளுணர்வினால் நினைத்து அதற்கான சரியான நடவடிக்கைகளை எடுத்து, போதைவஸ்து ஊற்றெடுக்கும் ஊற்றுக்களை அழித்தொழிக்க வேண்டும். அந்த ஊற்றிலிருந்து வழிந்தோடுவதை சிறிய பாத்திரங்களில் மெண்டெடுக்கும் ஏழைகள், சிறுவர்கள் மாணவர்கள், இளைஞர் - யுவதிகள், பெரியோரை கைதுசெய்து



பெரிதாக விளம்பரப்படுத்தி கயவர்களைத் தப்பவிட்டு தமக்கு தாமே மார்தட்டிக்கொள்ளுவதை நிறுத்த வேண்டும். இந்த கயவர்கள் மார்தட்டிக்கொள்ள ஊடகங்கள் எந்தவிதத்திலும் ஒலி, ஒளிபரப்பு செய்து அவர்களின் கயமைத்தனத்தை தொடர உதவக்கூடாது. இன்று கயவர்கள் தமது அட்டூழியங்களை வேரூன்ற, ஊடகங்கள் அறிந்தோ அறியாமலோ முக்கிய பங்காற்றுகின்றனர் என்பதை ஏற்றுக்கொண்டு தொடர்ந்து இச்சமூக சீர்கேட்டில் உதவி புரியாமல் புரையோடியிருக்கும் தொற்றுக்கிருமியை அழித்தொழிக்க ஊடகங்களை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் எமது சமூகம் எதிர்கால சந்ததியினர் பாதுகாக்கப்பட்டு சீரமைக்கப்பட பங்காற்ற வேண்டும்.

**விழித்தெழு மனிதா! மனித நேயம் கொண்டு ஊக்கங்காட்டு!!**

## சிற்றின்பம் வேண்டாம்

சிற்றின்பத்தில்
சிறைப்படாதே,
சீரழிவில்
அகப்படாதே,
அற்ப சலுகைக்காய்,
சொற்ப சுகத்துக்காய்,
சிற்றின்பச்
சகதியில் மூழ்காதே,
சோரம் போகாதே,
சேதமாகாதே,
சற்று சுயமாய்
சிந்திப்பாயே,
சறுக்கி விழாமல்,
சிறப்பாய் வாழலாமே.
சுற்று மதில் கட்டி,
சுய நலத்தில்
முடங்காதே,
மற்றவர் முன்னேற,
முடிந்த வரை
முயன்றிடுவாயே,
மன நிறைவு
பெறுவாயே,
மறுமலர்ச்சி,
காண்பாயே,
முக மலர்ச்சி
காண்பாயே,
முழு மகிழ்ச்சி
காண்பாயே,
முழு மனிதனாய்
வாழ்வாயே.
போதைப்பொருளில்,
சுகபோகப்பொருளில்,
பற்று வைக்காதே,
பாசம் வைக்காதே,
மோசம் போகாதே,
நாசமாகாதே,
வாழ்வை
நரகமாக்காதே,
பதறாதே, கதறாதே,
வேடம் தரிக்காதே,
வீணாய்ப்போகாதே,
பொன்னான வாழ்வை
மண்ணாக்காதே,
மாசாக்காதே,
சிற்றின்ப சேற்றில்
சறுக்கினால்,
மனம் வருந்த
வேண்டி வருமே,
மானம் இழக்க
வேண்டி வருமே,
மனச்சாட்சியின்
சொல் கேட்டால்,
மாண்புடன் வாழலாமே,
மீண்டு(ம்) எழலாமே.
அற்பத்தனமாய்
வாழ்ந்திடாதே,
அடுத்தவர் வசை
மொழி கேட்காதே,
அறிவிலியாய்
வாழாதே,
அவமானம் அடையாதே,
தன்மானம்
பெறலாமே,
தலை
நிமிர்ந்திடலாமே,
சிற்றின்பம்
அகற்றினால்,
சீரழிவைத்
தடுக்கலாமே,
சுய கௌரவம்
பெறலாமே,
சகலருக்கும்
வழி காட்டலாமே,
அனைவருக்கும்
ஒளி காட்டலாமே,
அறிவுடன் வாழலாமே,
தெளிவுடன் மகிழலாமே.

**ஆக்கம்:**
**பென்ஜமின் சோமநாதர்,**
**தெஹிவளை.**

## 01 நாம் விசுவாசத்தின்...

கடந்த சனிக்கிழமை தேவத்தை இலங்கை மாதா பசிலிக்காவில் 72வது சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது. அதில் கொழும்பு உயர்மறைமாவட்டம் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் தனது மறையுரையின் போது கிறிஸ்தவம் என்பது தன்னை மறந்து அயலவரை நோக்கி அன்பு, இரக்கம், பரிவு அர்ப்பணம் காட்டுவதேயாகும்.

இயேசு கிறிஸ்து சிறுவயது முதல் தன்னைப் பற்றி அல்ல மற்றவர்களை நினைத்து வாழ்ந்தார். கத்தோலிக்க சிறுவர்களாகிய நீங்களும் சிறுவயது முதல் தன்னை மறந்து அயலவர் பற்றி சிந்தித்து அனைவரையும் அன்பு, இரக்கம், கனிவு, அர்ப்பணம் என்ற இறை குணங்களை உங்களிலிருந்து வெளிப்படுத்தி வாழ வேண்டும். நீங்கள் உண்மையான கத்தோலிக்க சிறுவர்கள் என்பதை, எங்கிருந்தாலும் என்ன செய்தாலும் ஒவ்வொரு கணமும் அன்புக்கும், இரக்கத்திற்கும் அர்ப்பணத்திற்கும் சாட்சியாளராக வேண்டும். அன்பு, இரக்கம், அர்ப்பணத்தினூடாகவே உங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.
20 ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவர்கள் முன்னிலையில் திருப்பலியின் போது மறையுரை ஆற்றிய அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கூறினார்கள். மறையுரையின் தமிழாக்கம் அருட்பணி. மனோகுமாரன் அடிகளாரினால் வழங்கப்பட்டது.

## 01 சகல இன, மத...

கொடுத்து பெரும்பான்மையான பௌத்தமதத்திற்கு முக்கியத்துவமளித்து நாட்டின் அனைத்து இன, மதத்தினரும் இணைந்து வாழ வேண்டும் என்றார்கள். பௌத்த மக்கள் மத்தியில் தொடர்ந்து உரையாற்றுகையில்; பொருளாதார ரீதியில் எமது நாட்டை முன்னேற்ற கொள்கை, விழுமியங்கள், இறைமை, கலாச்சார பெறுமதிகளை விற்று வெளிநாட்டு உற்பத்திகளை வாங்குவதினூடாக நடைமுறைப்படுத்த தேவையில்லை. இந்நாட்டில் திறந்த பொருளாதார சீர்கேட்டால் ஏற்பட்ட போதைவஸ்து, நவநாகரீக பொருள்களினால் திக்கற்று வழிதவறும் எமது இளைய தலைமுறையினரைக் காப்பாற்ற மதத் தலைவர்கள் இணைந்து முன்செல்ல வேண்டும். சரியான வழியை தேர்ந்தெடுத்து வாழ அவர்களுக்கு உதவவேண்டும்.

இலங்கை அமரபுர பண்டிதரான மேதகு கொட்டுகொட தம்மாவாச அவர்களின் தலைமையில், அமரபுர மகா விகாராதிபதி கொலன்னாவை சிறிசுமங்கள, அமரபுர சங்க செயலாளர் அவர்களின் பங்களிப்பிலும் நடைபெற்ற இவ்வைபவத்தில் இந்த விகாரையின் அதிபதியான மேதகு உதம்மிட்ட அவர்களினதும் வழிகாட்டுதலில் சிறப்பு விருந்தினராக கர்தினால் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை விகாரை மண்டபத்தின் வரலாறு குறிப்பு சின்னத்தை திரைநீக்கம் செய்து வைத்தார்கள். கொட்டுகொட பங்குத் தந்தையான சிறியானந்த ப்ரனாந்து அவர்களும் கொழும்பு உயர் மறைமாவட்ட செயலாளருமான அருட் தந்தை டெனில்டன் சுபசிங்க அவர்களும் இவ்வைபவத்தில் பங்களித்திருந்தனர்.

## 12 ஆண்டவரின் அழைப்புக்குப்..

எடுக்கும் அன்பின் முயற்சி என்றும், அவரது பணியில் நம்மை நாம் ஈடுபடுத்த வேண்டும் என்றும், திருத்தந்தையின் செய்தி கூறுகிறது. நம் வாழ்வுக்கு ஆண்டவர் வைத்துள்ள திட்டத்தைக் கண்டுபிடிப்பதற்கு உதவும்படியாகவும், அவர் நமக்காகத் தேர்ந்தெடுத்துள்ள வாழ்வுப் பாதையில் தொடக்கமுதல் நடப்பதற்கு துணிவைத் தரும்படியாகவும், இந்த உலக நாளில் செபத்தில் இணைந்திருப்போம் என்று, தன் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.

## 10 விவிலியப் பகுதி விடைகள்

61. நம்மை துன்புறுத்து-வோருக்காக [5:44]
62. நிறைவுள்ளவர்களாக [5:48]
63. தர்மம் [6:3]
64. செல்வம் [6:19]
65. கண் [6:22]
66. உடல் முழுவதும் [6:22]
67. கடவுளின் ஆட்சியையும், அவருக்கு ஏற்புடைய-தையும் [6:33]
68. நாய்களுக்கு [7:6]
69. இடுக்கமான வாயில் வழியே [7:13]
70. வாழ்வுக்கு செல்லும் வாயில் [7:14]
71. போலி இறைவாக்கினர் [7:15]
72. நல்ல மரம் [7:17]
73. தந்தையின் திருவுளத்தின் படி செயல்படுகிறவர் [7:21]
74. பாறை மீது தம் வீட்டை கட்டியவர் [:24]
75. கடவுளின் மக்கள் [5:9]

## 02 இரத்தினபுரி...

இறுதி நாளன்று வருகை தந்த இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு. கிளிட்டஸ் பெரேரா OSB ஆண்டகை தமது உரையில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறியதுடன் தவக்கால நிகழ்வுகளை பங்குத்தந்தையுடன் இணைந்து சரியான முறையில் வழிபாடுகளை தயார் செய்துக்கொண்டு அனைவரும் பயன்பெறும்படியாக மேற்கொள்வோம் என கூறினார். இந்நிகழ்வை தங்குமிட வசதிகளுடன் நடாத்துவதற்கு இரத்தினபுரி மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி ஜூட் அமில அடிகளார் சகல ஏற்பாடுகளையும் செய்துதவினார். இவரின் உயர்வான பணியை பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி.**

## 02 மரியாயின் சேனை...

ஒப்புக்கொடுக்கப்பட்டது. மதிய உணவின் பின் மீள ஆரம்பமாகிய இந்நிகழ்வுகள் மாலை 5.00 மணிவரை தொடர்ந்து இடம்பெற்றது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கல் நன்றியுரை என்பவற்றுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன. நிவ்செட்டில் திருக்குடும்ப ஆலயத்தைச் சேர்ந்த பங்குமக்கள் பங்குத்தந்தை, பங்கில் இயங்கும் இரக்கத்தின் இராக்கினி இளைஞர் மரியாயின் சேனை உறுப்பினர்கள் இந்நிகழ்விற்கான ஏற்பாட்டு உதவிகளை செய்திருந்தனர். சேனை விழாக்களில் ஒன்றான இவ்வுல்லாச விழா கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பங்குகளிலுள்ள வளர்ந்தோர், மரியாயின் சேனையாளர்களின் நிர்வாக மேற்சபையான பரிகார மாதா கொமிசியமும் மற்றும் இம் மறைமாவட்டத்தின் பாடசாலைகளிலும் பங்குகளிலும் இயங்கும் சிறுவர் பிரசீடியங்களை நிர்வகித்து வரும் மேற்சபையான திருச்சபையின் மாதா பாலர் கியூரியாவும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**செயலாளர் – மரியாயின் சேனை – பரிகாரமாதா கொமிசியம்**

## 06 ஆளுமை

எரித்துக் கொண்டு (லூக் 24:32) அகில உலகையும் அன்பினால் பற்றி எரியச் செய்தவர் பவுல். அன்று அவர் ஏற்றிய ஒளி இன்றுவரை அணையவில்லை. எவராலும், அணைக்க முடியவில்லை. தனக்கு உறுதியூட்டும் இயேசுவின் ஆளுமையைக் கொண்டே (பிலி 4:13) இவை அனைத்தையும் செய்ததாகச் சொல்லுகிறார்.

பேதுரு, பவுல் போன்று இயேசுவின் ஆளுமையைப் பெற்று உலக உணர்வில் தடம் பதித்தவர்கள் அசிசி, பிரான்சிஸ் சவேரியார், இஞ்ஞாசியார், அந்தோனியார், குழந்தை தெரசாள் போன்றவர்கள். இவர்கள் யாவருக்கும் உந்து சக்தியாக இருந்தவர் இருக்கிறவர் இயேசு கிறிஸ்துவே. இவர்கள் உலகில் எண்ணற்றவர்களை இன்றும் மனம் மாற்றிக் கொண்டிருக்கின்றனர். கிறிஸ்துவோடு தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டு, வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் இயேசுவுக்கே (உரோ 14:17) என்ற இலட்சியத்தின் சாட்சியானவர்கள் சமுதாய மாற்றத்திற்கு வித்திட்ட இவர்கள் இயேசுவையே படைக்கலனாக அணிந்தவர்கள்.

இயேசு செலுத்திய புதிய வழிபாட்டில் தங்கள் உடலை மாசற்ற உயிருள்ள பலியாக ஒப்புக்கொடுத்து (உரோ 12:1-3) அவர் அளித்த படைக்கலன்களையே அணிந்துகொள்கிறார்கள். உண்மையை இடைக் கச்சையாகவும், நீதியை மார்புக் கவசமாகவும், அமைதியை நற்செய்தி அறிவிக்கும் மிதியடியாகவும், விசுவாசத்தைக் கேடயமாகவும், மீட்பைத் தலைப்பாகையாகவும், இறைவார்த்தையைப் போர் வாளாகவும் அணிந்து கொள்கிறார்கள் (எபே 6:14-17). இப்படைக்கலன்களை அணிகிறவர்கள் உலகில் வாழ்ந்தாலும் உலக ஆளுமையுடன் வாழ்கிறவர்கள் அல்ல. உலகப் போராட்டத்தில் ஈடுபட்டாலும் இவர்கள் பயன்படுத்தும் படைக்கலம் வானக வல்லமை கொண்டவை. கோட்டை கொத்தளங்களைத் தகர்த்து எறியக் கூடியவை. தர்க்கங்களையும் குதர்க்கங்களையும் முறியடிக்கக் கூடியவை. ஆணவத்தையும், அகந்தையையும் ஆண்டவருடைய காலடியில் அடிபணிய வைக்கக் கூடியவை (2 கொரி 10:3-5). இவ்வளவு ஆற்றல் மிக்க ஆயுதம் அணிந்த ஆளுமையின் ஊற்று எண்ணம்.

எண்ணங்கள் திரும்ப திரும்ப நினைக்கப்படும்போது சொல்லாகின்றன. சொற்கள் மேன்மேலும் பேசப்படும்போது செயல் வடிவெடுக்கின்றன. செயல்கள் மறுபடியும் மறுபடியும் செய்யப்படும்போது பழக்கமாகின்றன. பழக்கங்கள் மீண்டும் மீண்டும் கடைப்பிடிக்கப்படும்போது வழக்கமாகின்றன. வழக்கங்கள் வாடிக்கையாகும் போது நன்நடத்தையாக உருவெடுக்கின்றன. நன்னடத்தை நாளும் பிசகாமல் தொடரப்படும் போது நல் ஆளுமையைத் தோற்றுவிக்கின்றது. ஆகவே, கிறிஸ்துவின் மதிப்பீடுகளை நம் எண்ணங்களாக்கி எண்ணங்களைச் சொற்களாக்கிச் சொற்களைச் செயல்களாக்கி செயல்களைப் பழக்கமாக்கி, பின் வழக்கமாக்கி நன்னடத்தையாக்கி உயர் ஆளுமையைத் தோற்றுவித்துப் புத்துலகம் படைப்போம்.




## மணமகன் தேவை

1977இல் பிறந்த கத்தோலிக்க மதம், IT கம்பனியில் Computer Engineer ஆக வேலை பார்க்கும் மகளுக்கு நல்ல குணமான படித்த மணமகனை தாய் எதிர்பார்க்கின்றார். (N6145)

**தொடர்புகளுக்கு : 0779636724**

உரோமன் கத்தோலிக்கம், வத்தளையில் வசிக்கும் 1978இல் பிறந்த, உயரம் 5'4" Book Shopல் தொழில் புரியும் மகளுக்கு மணமகன் தேவை. (N6234)

**தொடர்புகளுக்கு : 0778840249**


## 02 மடு மண்ணில்...

இதில் 129 ஊக்குவிப்பாளர்கள் கலந்து கொண்டனர். பாசறையின் முதல் நாள் பாப்பிறை மறைபரப்புச் சபையின் இயக்குனர் அருட்பணி பசில் றொகான் ப்ரனாந்து அவர்களும், மன்னார் மறைமாவட்டத்தின் குரு முதல்வர் அருட்பணி விக்டர் சோசை அவர்களும் இன் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வர் தனது உரையின்போது அவர் ஊக்குவிப்பாளர்கள் அனைவருக்கும் கூறிய ஒரு கருத்தானது, "ஊக்குவிப்பாளர்களாகிய நீங்கள் கத்தோலிக்க மறையை சரியான முறையில் கடைபிடிக்க பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும், இதுவே ஊக்குவிப்பாளர்களின் முதல் பணி, நல்ல காரியத்தை பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்து அவர்களை கிறிஸ்துவிற்குள் ஒன்றினைக்க உதவி செய்ய வேண்டும்" என கூறினார். அதனைத் தொடர்ந்து மூன்று நாட்களும் ஊக்குவிப்பாளர்களை ஊக்குவிக்கும் முகமாக பல தலைப்புக்களில் உரைகள் நிகழ்த்தி ஊக்குவிப்பாளர்கள் அனைவரையும் பேசனைப்படுத்தினர்.

விசேடமாக பயிற்சிப் பாசறையின் கடைசி நாள் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிமேதகு கிறிஸ்ரி நோயல் இம்மானுவேல் ஆண்டகையினால் இரண்டாம் பயிற்சிப்பாறையின் சின்னம் சூட்டும் திருப்பலியானது தலைமைதாங்கி சிறப்பிக்கப்பட்டு, பின்னர் அனைத்து ஊக்குவிப்பாளர்களுக்கும் சின்னமும் வழங்கிவைக்கப்பட்டது.

**அருட்பணி பசில் றொஹான் ப்ரனாந்து அவர்கள், பாப்பிறை மறைபரப்புச் சபைகளின் தேசிய இயக்குனர். பாப்பிறை மறைபரப்புச்சபை தமிழ் பிரிவு, தேசிய காரியாலயம்.**

## 09 சட்டவிரோதமான...

இரண்டாம் குழுவானது கொழும்பு 14, கிராண்பாஸ் நகரத்தில் ஆரம்பித்து பாலத்துறை ஊடாக அளுத்மாவத்தை பாதையினூடாக மோதரைக்கும், மூன்றாம் குழுவானது ஹேக்கித்தை சந்தியில் இருந்து புதிய பாலத்தினூடாக மாலை 5.00 மணியளவில் விஸ்டவயிக் மைதானத்திற்கும் வந்தடையும். அதன்பின்பு அம்மைதானத்தில் அரசத் தலைவர்களின் பங்கேற்போடு பொதுவான எதிர்ப்புக் கூட்டமொன்று நடைபெறும்.

உ. இவ்விசேட செயற்திட்டம் ஒழுங்கமைப்பு குழுவின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, நான் கத்தோலிக்க இறைமக்களினூடாக எம் நாட்டு மக்கள் அனைவரிடமும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்வது, இன, மத, குல பேதங்களின்றி பாரபட்சம் பார்க்காது எம்நாட்டில் இன்று நிலவுகின்ற அபாயகரமான நிலைக்கு இட்டுச்செல்லும்போதைப்பொருள் இராட்சசனுக்கு எதிராக போராடுவதற்கு பங்களிப்பு வழங்கவேண்டுமென்றாகும்.


இச்செயற்பாட்டை செவ்வனே செய்வதற்கு எம்மோடு கைக்கோர்த்து செயற்படும்படி அனைத்து மத அமைப்புக்களிடமும் மதத்தலைவர்களிடமும் வேண்டுகோள் விடுக்கின்றேன். ஞானத்துடனும் தெளிந்த அறிவுடனும் செயற்படுவதோடு இறைவனுக்கும் மனிதர்களுக்கும் உண்மையுள்ளவராக வாழ்வதற்கு இறைமகனாம் இயேசுவுக்கு வழிகாட்டிய புனித கன்னிமரியாளின் பரிந்துரை மூலம் எமது எளிமையான முயற்சியானது வெற்றிகரமாக அமைய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். இறைவனாம் ஆண்டவர் எம் வேண்டுகோளை நிறைவேற்றுவாராக. எம் தாய் நாடு இந்நிலையில் இருந்து மீட்கப் பெறுவதாக

**அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**கொழும்பு உயர்மறைமாவட்டம் பேராயர்**
**2019, பங்குனி 05**


மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com

**"வாருங்கள் யாத்திரையாக கர்த்தர் ஆலயம் செல்வோம், கர்த்தரின் ஆசீரைப் பெறுவோம்"**

# பரப்புக்கடந்தான் கர்த்தர் திருத்தல திருவிழா



**திருவிழா திருப்பலி 12.04.2019 காலை 7.30 மணிக்கு**

**மேதகு ஆயர் பெடலிஸ் லயன்ஸ் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின்**

**தலைமையில் உயர்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

11ந் திகதி மாலை 5.00 மணியளவில்
திருச்சிலுவைப்பாதை வழிபாடும் நற்கருணை வழிபாடும்
ஒப்புக்கொடுக்கப்படும்.


தவக்காலத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும்
மாலை 5.30ற்கு திருச்சிலுவைப்பாதை வழிபாடும்
திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

அருட்பணி. சத்தியராஜ், பங்குத்தந்தை

## திருப்பலிகள் (12.04.2019)

| | | |
|---|---|---|
| காலை 7.30 | - | திருவிழா திருப்பலி |
| காலை 10.00 மணி | - | இரண்டாம் திருப்பலி |
| நண்பகல் 12.00 மணி | - | மூன்றாம் திருப்பலி |
| மாலை 5.00 மணி | - | நான்காம் திருப்பலி |

(N6240)


அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.


## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்



**திருமண சேவைகள்**

**பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.**

**வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்**





| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |

- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.


**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**


| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.



| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |







## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை,
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்